விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 11 புதன்கிழமை (25.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157



ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# தமிழ் மக்களின் நிலையை விளக்க

# சீனா மற்றும் ரஷ்யாவுடன் பேச்சு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு


(கொழும்பு)

தமிழ் மக்கள் யுத்தத்தின்போதும் அதன் பின்பும் அனுப விக்கின்ற துன்பங்கள் குறித்தும் அரசாங்கத்தின் நிலைப் பாடு தொடர்பிலும் சீனா மற்றும் ரஷ்யாவிடம் விளக்கவுள் ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.



அவர் மேலும் கூறியதாவது,

இலங்கையைப் பொறுத்தவரை நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின்போது சீனாவும், ரஷ்யாவும் அதிக (20ஆம் பக்கம் பார்க்க)



முன்னாள். இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன் சேகா பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அழைத்துவரப்பட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

## மாவை எம்.பி.

## யாழ். சிறைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் உண்ணாவிரத மிருக்கும் அரசியல் கைதிகளின் கோரிக்கை களை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் மாவை. சேனாதிராசா நேற்று நேரில் சென்று கேட்டறிந்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 08 அர சியற் கைதிகள் தங்களை விடுதலை செய் யக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ள னர்.

இந்தத் தமிழ் அரசியல் கைதிகளின் குற்ற ஒப்புதல் வாக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசாங்கம் முன்வரவேண்டும்

### ஐ.தே.க. வலியுறுத்தல்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை படிப்படியாக நீக்கி ஜனநாயகத்தை அரசாங்கம் நிலைநாட்ட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலி யுறுத்தியுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப் பாடு என்னவென்று விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது,

அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவா தத் தடைச் சட்டத்தையும் உடனடியாக ரத்துச் செய்யவேண்டும் (20ஆம் பக்கம் பார்க்க)

## கருணாநிதியும் ஸ்ராலினும் கனிமொழியைச் சந்தித்தனர்

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் வழக் குத் தொடர்பில் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் வைக்கப்பட்டுள்ள கனிமொழியை அவரது சகோதரரும், முன்னாள் துணை முதலமைச்சருமான மு.க. ஸ்ராலின் நேற்று மத்திய புலனாய்வுக் கழக நீதிமன்றத்தில் சந் தித்துக் கலந்துரையாடினார்.

கனிமொழியை (20ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்றங்களை மறைக்கவே இராணுவத்தின் மாபெரும் மாநாடு

### மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவம் ஏற்பாடு செய்துள்ள தோற்க டிக்கப்பட்ட தீவிரவாதம்– இலங்கையின் அனு பவங்கள் என்னும் தலைப்பிலான சர்வதேச கருத்தரங்கிற்கு விடுக்கப்பட்ட அழைப்புக் களை நிராகரிக்கும்படி மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சர்வதேச நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கையின்போது சட்டரீதியற்ற முறையில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதை மூடி மறைக்கவே படைத் தஷரப்பு இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ள தாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் சுட் டிக்காட்டியுள்ளது.

அத்துடன் அரசாங்கத்தின் மீது சுமத்தப் பட்டுள்ள போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரி மைகள் மீறல்களை முற்றாக மூடிமறைக்கும் நோக்கத்துடனேயே இக் கருத்தரங்கு நடத்தப் படுவதாகவும் மனிதவுரிமைகள் கண்காணிப் பகம் குற்றம் (20ஆம் பக்கம் பார்க்க)







நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# விண்ணப்ப முடிபுத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச் சேவைக்கு அலுவலகப் பணியாளர் சேவையில் வகுப்பு (III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரலின் முடிபுத் திகதி எதிர்வரும் 10ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார்.

இவ் விண்ணப்பத்திற்கான முடிபுத்திகதி இன்று என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

(C-2290

# புத்தளம் வீதியொன்றுக்கு தந்தை செல்வாவின் பெயர்!



(புத்தளம்)

புத்தளம் நகரிலுள்ள பெயர்களற்ற அனைத்து குறுக்கு வீதிகளுக்கும் புதிய பெயர்களைச் சூட்டி அதற்கான பெயர்ப் பலகைகளை நாட்டிவைக்க புத்தளம் நகரபிதா கே.ஏ.பாயிஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக நகர சபைப் பேச்சாளரும், நகர பிதாவின் செயலாளருமான எஸ்.எச்.எம். நியாஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், புத்தளம் நகரிலுள்ள பெரும்பாலான வீதிகளுக்கு நீண்டகாலமாக பெயர்கள் இல்லாததால் பலவித சிரமங்களை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

உரியவர்களுக்கு கடிதங்கள் வருவதில் கூட காலதாமதம் ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் அனைத்து வீதிகளுக்கும் பெயர் சூட்ட நகரபிதா முடிபு செய்துள்ளார்.

1976ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி காலத்தின் போது புத்தளம் பெரிய பள்ளிவாசலில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பல முஸ்லிம்கள் கொல்லப்பட்ட போது இது குறித்து நாடாளு மன்றத்தில் குரல் எழுப்பி நியாயம் கேட்ட தந்தை செல்வநாயகம், முஸ்லிம் மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் எம்.எச்.எப்.அஷ்ரப் மற்றும் புத்தளத்தில் முஸ்லிம் நகர சபைத் தலைவர்களாக கடமையாற்றியோர், மக்களின் நலனுக்காக உழைத்தவர்கள் போன்றோரின் நாமங்கள் இவ் வீதிகளுக்கு சூட்டப்படும் எனத் தெரிவித்தார். (ச-5)

## மோட்டார் சைக்கிள் திருத்தல் கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

தொழிற்பயிற்சியில் முதற்தர தேசிய தர சான்றிதழை வழங்கும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் மாதத்தில் மோட்டார் சைக்கிள் திருத்துதல் கற்கைநெறி ஆரம்பமாக உள்ளதால் கற்க ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன்னராக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, வலந்தலைச் சந்தி, காரைநகர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் அறிவித்துள்ளார். (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி நவரட்ணம் பாக்கியம் (மாம்பழம்மா)



காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகவும், வட்டு. வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணம் பாக்கியம் 23.05.2011 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் அமரர்கள் கணபதிப்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகளும், அமரர்கள் முருகேசு செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் அமரர் நவரட்ணத்தின் அன்பு மனைவியும்

இராசரத்தினம்(சைவம்), அமரர் செல்லம்மா, செல்வரத்தினம், அன்னலட்சுமி, அன்னபாக்கியம், அமரர் பாலகிருஸ்ணன், சீதேவி, அமரர் முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

பாக்கியம், அமரர் ஆண்டிஐய்யா, மதுரம், கதிரமலை, வேலாயுதம், மனோன்மணி, விநாயகமூர்த்தி, பிறேமா, அமரர் பொற்கொடி, கந்தசாமி, குணரத்தினம், தங்கராசா, இராசரத்தினம்,அமரர் வாமதேவன்,அரியராசா ஆகியோரின் மைத்துனியும்

அமரர் மலர்மணி, வரதராஜன், அமரர் மோகனகிருஸ்ணன், இராசமலர், தேவமலர், சந்திரமலர், துபாசினி, பவன், சசிகலா(சசி), சண்முகராசா(மோகன்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

இராசரத்தினம், புஸ்பகாந்தி, முருகானந்தராசா, பாலசுப்பிரமணியம், ஜெயரட்ணம், சிவரூபன், சசிகலா, பரமலிங்கம், நிமால்குமார் ஆகியோரின் அன்பு மாமியும்,

சுமதி, மாலதி, அமரர் கிரிதரன், நிவேதா, அருந்ததி, ஜவகர், திலீபா, சுரேக்கா, நவநீதன் , ஜீவநீதன், மோகனநீதன், அஞ்சனா, மைதிலி, பிரியங்கா, ஆராதனா, பிரதீபன், சுதாகரன், சிவராம், காவியன், துவிகரன், யூலியா, ஜஸ்மின், ஜசிந்தன், ஜனகன், விதுஷா, யதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிலம்பரசன், வைஸ்ணவி, ஐஸ்வர்யா, பிரியங்கா, தருண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.05.2011 புதன்கிழமை அன்று தொல்புரம் கிழக்கு, அந்தோனியார் கோவிலடியில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புக்கு:-

| | |
|---|---|
| S. ஜெயரட்ணம் (யாழ்.,இலங்கை) | -0094-212250233 |
| R. மைதிலி (திருமலை ,இலங்கை) | -0094-262223406 |
| N.வரதராஜன் (சுவிஸ்) | -0041-326391681, 0041-796121681 |
| V. பவன் (ஜேர்மனி) | -0049-17624948230 |

**மனோதத்துவ வைத்தியம்**

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

28.05.2011 முதல் 03.06.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள்,வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஜூரிஸ் இன்(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.
(C-3277)

# ஓராண்டு நினைவின் நினைவாக

## அமரர் லூர்துநாயகி இராயப்பு



அன்பான பேச்சு பண்பான உபசரிப்பு
இனிமையான புன்சிரிப்பு
இதனைக் கண்டும் கேட்டும்
ஆண்டொன்று ஆனதே அக்கா
பாசத்துடனும் நேசத்துடனும்
எம்முடன் பழகிவிட்டு
வானுறையும் தெய்வமாகினாயே
நான் அன்புடன் அழைக்கும் அக்காவே

பிறப்பு
28.11.1949

இறப்பு
25.05.2010

என்றும் உங்கள் நினைவோடு
லெ.கெங்காதரன் ஆச்சாரியார்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

314, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8415

ஒரே நாளில் சகலவகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு பயிற்சிக் கருத்தரங்கு

**(Mobile Phone Software & Hardware Repair Training - 2011)**

காலம் - 29/05/2011 (ஞாயிற்றுக் கிழமை) இடம் - UNI - ICT Campus, No:- 83, Palaly Road, Kantharmadam
நேரம் - காலை 10 மணி தொடக்கம் 2 மணிவரை பயிற்சி நெறிக் கட்டணம் - 3000/= மட்டும்

எமது ஒரே நாள் பயிற்சிக் கருத்தரங்கில் பல்வேறு வகையான கைத்தொலை பேசிகளையும் நீங்களே சுயமாக திருத்துவதற்கான பயிற்சி வழங்கப்படுவதுடன் இப் பயிற்சிக் கருத்தரங்கில் பாடக் குறிப்புக்களும் Mobile Phone Repairing CD களும் இலவசமாக வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றலாம்.

இப் பயிற்சிக்கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்புவோர் 28ம் திகதிக்கு முன்னர் எமது நிறுவனத்திற்கு வருகை தந்து பயிற்சி நெறிக் கட்டணத்தை செலுத்தி அனுமதி அட்டையினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 021- 321 - 6433 / 0777 - 110 862

# இன்று ஒரு தகவல்

## பிச்சைக்காரிக்குக் கிடைத்த வைரமூக்குத்தி

லோகமான்ய பாலகங்காதர திலகருக்குப் பதினைந்து வயதில் திருமணம் நடந்தது. அவரது மனைவியின் பெயர் தபிபாய். மிகவும் பெரிய இடத்து குடும்பத்துப் பெண். நல்ல குணவதி. அவர்களிருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு குடும்பம் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலத்தில் திருடர்கள் பயம் அதிகம். இந்தக் காலத்தில் மட்டும் என்ன வாழ்கிறது? என்று கேட்கிறீர்களா? நீங்கள் கேட்பதும் நியாயம்தான். இருந்தாலும் இந்தக் காலத்துத் திருடனுக்கும் அந்தக் காலத்துத் திருடனுக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. அதாவது இந்தக் காலத் திருடன் நியாயம்... அநியாயம் எதையும் பார்ப்பது கிடையாது. எதுவாக இருந்தாலும் திருடிக் கொண்டு போய் விடுகிறான். ஆனால் அந்தக் காலத்துத் திருடன் அப்படி இல்லையாம். அவனிடம் ஒரு தார்மீக உணர்வு உண்டாம். அந்தக் காலத்துக் கொள்ளைக்காரர்கள்... எதைக் களவாடினாலும் சரி... அரிசியை மட்டும் களவாடுவதில்லையாம்! இப்படியொரு கொள்கையை அந்தக் காலத்துத் திருடர்கள் வைத்துக் கொண்டு அதை கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

அதனால் பாருங்கள்... அந்தக் காலத்துப் பெண்கள் நகை நட்டுக்களைப் பத்திரமாக வைக்க வேண்டுமானால் பெட்டியில் வைக்காமல் அரிசிப் பானையில் போட்டு வைப்பார்கள்.

அந்தக் காலத்துப் சேஃப்டி லொக்கர் அரிசிப் பானை! வளையல், மூக்குத்தி, தோடு இப்படி எதுவாக இருந்தாலும் அதில் போட்டு பத்திரமாக வைத்து விடுவார்கள். திருடன்தான் அரிசிப்பானை பக்கமே போவதில்லை.

திலகரின் மனைவி தபிபாயும் தன்னுடைய ஆபரணங்களை ஓர் அரிசிப் பானைக்குள் போட்டு மூடி வைத்திருந்தார்.

இப்படியிருந்த போது ஒருநாள் பிச்சைக்காரப் பெண் ஒருத்தி வீடு வீடாகப் பிச்சை கேட்டுக் கொண்டே வந்தார். அவள் திலகர் வீட்டுக்கும் வந்து, "தர்மம் போடுங்க. தாயே!" என்றாள். பிச்சைக்காரியின் குரல் தபிபாயின் காதில் விழுந்தது. உடனே அவர் கை நிறைய அரிசியை அள்ளிக் கொண்டு வந்து போட்டார். பாத்திரத்தில் அரிசியைப் போட்டதற்கு பிறகுதான் அது ''பளீச் '' என்று தபிபாயின் கண்ணில் பட்டது! அதாவது... அந்த அம்மாவின் ஒரு வைரமூக்குத்தி அரிசியோடு சேர்ந்து அந்தப் பிச்சைக்காரப் பெண்ணின் பாத்திரத்திற்குப் போய்விட்டது.

அந்த அம்மாவிற்கு மனதில் ஒரே குழப்பம்! ''மூ க்குத்தி போய் விட்டதே... பிச்சை பாத்திரத்திலிருந்து அதை எப்படி எடுப்பது?'' வாய் திறந்து அதைக் கேட்பதற்கும் கூச்சம்!

திண்ணையில் உட்காந்திருந்த திலகர் இவ்வளவையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். மனைவியின் மனதிற்குள் நடக்கும் மௌனப் போராட்டத்தைப் புரிந்து கொண்டார். பின் அவர் மனைவியைப் பார்த்து, ''தபிபாய்! இது தெய்வ சம்மதம்! அவளுக்குச் சேர வேண்டிய மூக்குத்தி அவளிடம் போய்ச் சேர்ந்து விட்டது! பிச்சைப் பாத்திரத்தில் விழுந்த மூக்குத்தியைத் திரும்பவும் எடுக்க வேண்டாம்!" என்றார்.

"சரி" என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு எதுவும் பேசாமல் தபிபாய் வீட்டுக்குள் சென்று விட்டார்.

இந்தக் காலத்தில் அந்த மாதிரி எல்லாம் நடக்குமா?

வெறும் அரிசியைப் போட்டுவிட்டே நாம் விவகாரம் பண்ணியிருக்கமாட்டோமா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ்.குடாநாட்டு மக்கள் தனித்துவமான கலாசார விழுமியத்தை கொண்டவர்கள்

## யாழ்.கட்டளைத் தளபதி புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வசித்து வரும் தமிழ் மக்களின் கலாசார விழுமியங்கள் தனித்துவமானது என யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இந்து, பௌத்த கலாசாரப் பேரவை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டின் கட்டளைத் தளபதியாக நான் பொறுப்பேற்று ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. இதுவரை மதங்களுக்கிடையில் எந்த விதப் பிரச்சினையும் ஏற்பட்டதில்லை.

இந்துமதமும் பௌத்தமதமும் பல ஒற்றுமைத் தன்மையை கொண்டுள்ளது. இதனை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நான் கடமையாற்றும் இந்தப் பகுதியிலுள்ள மக்களை எனது உறவு முறையாகவே பார்க்கிறேன். அவர்கள் தமிழர்கள் என வேறுபடுத்தவில்லை.

இந்து, பௌத்த சங்கங்கள், பேரவைகள் இங்கு நிறுவப்பட்டதன் மூலம் தமிழ், சிங்கள மக்களிடையே ஒற்றுமை மேலும் வளர்த்தெடுக்கப்படும்.

நான் பௌத்த மதத்தை சார்ந்தவனானாலும் இந்துத் தெய்வங்களையும் வழிபடுபவன். எமது பௌத்த விகாரைகளில் பல இந்துத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன.

இது தவிர இந்து ஆலயங்களுக்கு அருகாமையில் பணியில் ஈடுபடும் இராணுவத்தை அங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறேன். தமிழர் கலாசாரத்தையும் கலைப் படைப்புக்களையும் விழாக்களில் பங்கு பற்றும் போது கண்டு ஆச்சரியப்பட்டதுண்டு.

அந்த உணர்வை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை.

மேலும் தமிழில் பேச எனக்குத் தெரியும். ஓரிரு வார்த்தை தமிழில் பேசுகிறேன் என தெரிவித்துவிட்டு நன்றி வணக்கம் எனக்கூறி தனது பேச்சை முடித்துக் கொண்டார்.(ஸ்ரீ-6)

# சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக சாரதி அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களில் சுட்டிலக்கம் 3390 வரையிலான பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப்பரீட்சை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி உதவி அரசாங்க அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அதற்கு முற்பட்ட திகதிகளில் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை(Trail Exam) நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் இடம்பெறவுள்ளது.

எனவே உரிய பரீட்சார்த்திகள் தமக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுகளுடன் உரிய நேரத்திற்கு சமூகம் தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

அத்துடன் பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படவுள்ளதால் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கின் அடிப்படையில் மட்டுமே அனுமதிகள் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40-60 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 90 |
| தக்காளி | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 60 | 80 | 60 |
| கரட் | 70 | 100 | 60 |
| பூசணி | 20-25 | 40 | 40 |
| புடோல் | 30 | 60 | 30 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 140 |
| பெரிய வெங்காயம் | 45 | 50 | 80 |
| பாகற்காய் | 70 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 25 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | -- |
| பயற்றங்காய் | 15-20 | 30 | 50 |
| லீக்ஸ் | -- | 70 | 70 |
| பீற்றூட் | -- | 60 | 60 |
| கறிமிளகாய் | -- | 100 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 400 | 350 |
| போஞ்சி | -- | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | -- | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 30 | 20 |
| தேசிக்காய் | 140 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

*25.05.2011*
*(வைகாசி 11,புதன்கிழமை)*
*சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 4.09 மணிவரை*
*சதயம் பின்னிரவு 12.20 மணிவரை*
*இராகுகாலம் 11.52-1.22 மணிவரை*
*சுபநேரம் 4.22-5.52 மணிவரை*
*அட்டமி-நவமி*

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும், நீங்கள் எதிர்பாராத ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

**இடபம்** மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், தந்தை வழியில் தனலாபம் உண்டு, பூர்வீகச் சொத்துதகராறுகள் அகலும்.

**மிதுனம்** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய முன்வருவீர்கள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, கௌரவக்குறைவான நாள், எடுத்த கருமங்கள் தாமதமாக நடைபெறலாம், பிரயாண பயமுண்டு.

**சிங்கம்** உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படும் நாள், கடன்பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும்.

**கன்னி** பிள்ளைகளால் பெருமை வந்து சேரும் நாள், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், அரைகுறையாக இருந்த பணியை மீண்டும் தொடர்வீர்கள்.

**துலாம்** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், விசுவாசமானவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், தாய்வழி உறவினரால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உதவும்.

**மகரம்** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி சாதிக்க வேண்டிய நாள், மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும்.

**கும்பம்** புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், உறவினருக்கான சில செலவுகளை செய்ய நேரிடலாம், சிந்தனை மிகுதியுண்டு.

**மீனம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், சயனசுகக் குறைவுண்டு, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

வளவன்

# சிங்கப்பூர் பிரதி பிரதமரும் அமைச்சர் பீரிஸும் சந்திப்பு

## இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை

சிங்கப்பூருக்கு அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அந்நாட்டின் பிரதி பிரதமர் தர்மன் சண்முகரட்ணத்தை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

முக்கியமாக தர்மன் சண்முகரட்ணம் சிங்கப்பூரின் பிரதி பிரதமராக நியமனம் செய்யப்பட்டுள்ளமைக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அனுப்பிவைக்கப்பட்ட வாழ்த்துச் செய்தியையும் அமைச்சர் பீரிஸ் கையளித்துள்ளார்.

இதேவேளை, சிங்கப்பூரின் பிரதி பிரதமர் தர்மன் சண்முகரட்ணம் இலங்கைக்கு விஜயம் செய்து, மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திகளை பார்வையிட வேண்டும் என்று அமைச்சர் அழைப்பும் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இலங்கையின் தற்போதைய செயற்பாடுகள், நல்லிணக்கம் மற்றும் பொருளாதார வேலைத் திட்டங்கள் என்பன தொடர்பிலும் சிங்கப்பூர் பிரதி பிரதமருக்கு எடுத்துரைத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களில் அதிகமானோர் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும் அதிகளவான முன்னாள் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் விளக்கிக் கூறியுள்ளார்.

அத்துடன் பொருத்தமானதொரு உடன்படிக்கையை எட்டும் பொருட்டு தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்த அக்கறை கொண்டுள்ளதாகவும் வெளிநாடுகளில் இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஊக்கமுடன் பங்கேற்பதை அரசாங்கம் ஊக்குவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே சிங்கப்பூரின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சரான லிம் கியாங்கை சந்தித்து பேச்சு நடத்திய அமைச்சர் பீரிஸ் 30 வருடகால முரண்பாட்டு நிலைமையின் பின்னர் இலங்கையில் சுற்றுலாத் துறை வளர்ச்சியடைந்து வருவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வித்தியானந்தா கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு மாபெரும் விளையாட்டுப் போட்டி

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் மாபெரும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதில் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையே உதைப்பந்தாட்டப் போட்டியும், வலைப்பந்தாட்டப் போட்டிம் நடைபெறவுள்ளன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையே கிரிக்கெட் போட்டி நடாத்தப்படவுள்ளது.

மேற்குறித்த போட்டிகளில் பங்கேற்ற விரும்பும் பாடசாலைகளும், கழகங்களும் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னதாக முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் 024 324 8348 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது செயலாளர், பழைய மாணவர் சங்கம், முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் 077 04 20528 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பினை ஏற்படுத்தி தமது பதிவினை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கொழும்புக்கும் புத்தளத்துக்குமான இரட்டை புகையிரதப் பாதை திறப்பு

(கொழும்பு)

கொழும்புக்கும் புத்தளத்துக்கும் இடையிலான புகையிரதச் சேவைகளில் ஏற்படும் வீண் தாமதங்களைக் குறைக்கும் நோக்கில் கொழும்புக் கோட்டைக்கும் ஜா-எலைக்கும் இடையில் அமைக்கப்பட்டுவந்த இரட்டை புகையிரதப் பாதை நேற்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த இரட்டைப் பாதையை சீதுவை வரையில் விஸ்தரிக்க புகையிரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஜா-எலையில் இருந்து சீதுவை வரைக்கும் உள்ள 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு இரட்டைப் புகையிரதப்பாதை அமைக்கவும் துடல்ல மற்றும் அலவதுபிட்டிய ஆகிய புகையிரத நிலையங்களில் புகையிரத தரிப்புக்காக புதிய மேடைகளை அமைக்கவும் புகையிரதத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

# பெண்ணை கொலை செய்து நகைகளை திருடியவர் பொலிஸாரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் பெண்ணொருவரை கொலை செய்து 15 பவுண் நகையை கொள்ளையிட்ட பிரதான சந்தேக நபர் மஸ்கெலிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலிய கவரவில பிரதேசத்தில் வைத்து இவரை ஹற்றன் பொலிஸாரும் களுவாஞ்சிக்குடி பொலிஸாரும் இணைந்து கைது செய்தனர்.

இதன்போது மேலும் இரண்டு பெண்களும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரிடம் இருந்து கொலை செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து அபகரிக்கப்பட்ட 15 பவுண் நகையும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.


களுவாஞ்சிக்குடியில் குறித்த பெண் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரவு வேளையில் ஆயுதம் தரித்த இருவர் இவரை கொலை செய்துவிட்டு பணத்தையும் நகைகளையும் கொள்ளையிட்டு சென்றதாக களுவாஞ்சிக்குடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2011

ICC Cricket World Cup 2011


## வினா-விடைப் போட்டி பரிசளிப்பு விழா





நவகலா வழங்கிய தினமொரு பரிசிலை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதனுடன் இணைந்து வலம்புரி நிர்வாக இயக்குநர் எஸ்.வெற்றிவேலாயுதம் வழங்கிவைத்த போது...



தினமொரு பரிசிலை பிரதமவிருந்தினருடன் இணைந்து வலம்புரியின் பிரதம ஆசிரியர் வழங்கி வைத்த போது




தினமொரு பரிசிலை பிரதம விருந்தினருடன் இணைந்து வலம்புரியின் ஆலோசகர் ஜி.திருமாலழகன் வழங்கிவைத்த போது...




தினமொரு பரிசிலை அருள்குளோபல் உரிமையாளர் வி.பி.குமரன் வழங்கிவைத்த போது...

தொடரும்...





கைதடி விழிப்புலனற்றோர் சங்கத்தின் 32 ஆவது அகவை நிறைவு விழாவும் பூங்கா பெண்கள் விடுதி திறப்பு விழாவும் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண சமூக சேவை திணைக்கள பணிப்பாளர் கே. சிவகரன் மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி வி. ரமேஷ் விடுதியை திறந்து வைப்பதையும் அருகில் சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி. ம.சாந்தசீலன் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# தலைமைத்துவ பயிற்சியின் போது முஸ்லிம் மாணவர்கள் கலாசாரப்படி உடையணிய அனுமதி



## உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள முஸ்லிம் மாணவியருக்கு அவர்களது கலாசாரப்படி உடை அணிவதற்கும் இடமளிக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ். பி.திஸாநாயக்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு கோட்பாட்டு ரீதியாகவும் சொல் ரீதியாகவும் அளிக்கப்படுகின்ற தலைமைத்துவ மற்றும் சிந்தனை மேம்பாட்டு பயிற்சியின் பிரதான அங்குரார்ப்பண வைபவம் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சியின் போது முஸ்லிம் மாணவர்கள் தங்களது நாளாந்த சமயக் கடமைகளை குறித்த நேரத்திற்கு நிறைவேற்றுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழகங்களுக்குப் புதிதாகத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு தலைமைத்துவ மற்றும் சிந்தனை மேம்பாட்டு பயிற்சி 28 மத்திய நிலையங்களில் ஆரம்பமாகியுள்ளது. ஓரிரு நிலையங்களில் சிறுசிறு குறைபாடுகள் இருப்பதாக அறிகின்றேன். அக்குறைபாடுகளை அடுத்துவரும் இரண்டொரு தினங்களில் நிவர்த்திப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இதேநேரம் திருகோணமலையில் அமைக்கப்பட்டிருக்கும் பயிற்சி நிலையத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிகிறேன். அங்கு பயிற்சி பெறுகின்ற மாணவருக்குத் தண்ணீர் போத்தல்களை வழங்குமாறும் அதற்குரிய செலவை உயர் கல்வி அமைச்சு பொறுப்பெடுக்கும் என்றும் அமைச்சர் தனது உரையின் போது அறிவித்தார்.

இந்த வதிவிடப் பயிற்சி மூன்று வாரகாலம் நடைபெறும். அதன் பின்னர் இவர்கள் மூன்று மாத காலம் தங்களது வீடுகளில் இருந்தபடி ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பயிற்சியைப் பெற வேண்டும். இப்பயிற்சிக்காக நாடெங்கிலும் 300 நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான நிதியுதவியை உலக வங்கி வழங்கியுள்ளது.

இதேநேரம் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கவிருக்கும் பயிற்சியாளர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் தற்போது அமெரிக்க நிலையத்திலும் பிரிட்டிஷ் கவுன்ஸிலிலும் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ள மாணவ, மாணவிகள், ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் பயிற்சியை முடித்துக் கொண்டு பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்ததும் ஆங்கில மொழிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இப்பரீட்சையில் குறைந்த புள்ளி பெறுபவர்களுக்கு அமெரிக்க தொலைக்கல்வி நிலையத்தின் ஊடாக ஆங்கிலம் போதிக்கப்படும். இத்திட்டத்திற்கென அமெரிக்கா 10 ஆயிரம் புலமைப் பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.

இவ்வாறு விரிவான அடிப்படையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற இப்பயிற்சி நெறியை பொறுத்துக் கொள்ள முடியாது சில பொறாமைக்காரர்கள் இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்கள். நாம் நீதித்துறையினருக்கு இது தொடர்பாக தெளிவாக எடுத்துக் கூறினோம் என்றார். (ஸ்ரீ-2)

# பல்கலை. விரிவுரையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார்



## ஜனாதிபதி அறிவிப்பு

பல்லைக்கழக மாணவர்களுக்காக மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்களை நிறை வேற்றுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் என்ற ரீதியில் பிள்ளைகளுக்காக செய்ய வேண்டிய கடமைகளை தடையின்றி நிறைவேற்றுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலருடன் நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண் டவாறு கூறியுள்ளார். தொழிற்சங்க ஒன்றியத்தின் கோரிக்கைகளை தீர்ப்பதற்கான முறையொன்று உள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பல்க லைக்கழக விரிவுரையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாரெனவும் குறிப்பிட்டார். கடந்த வரவு-செலவு திட்டத்திற்கமைய சம்பளம் அதிகரிக்கப்பட்டு 6 மாதகாலம் நிறைவடைவதற்கு முன்னர் மீண்டும் சம்பளத்தினை அதிகரிக்குமாறு கோரப்பட்டுள்ள மையினால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து இங்கு ஜனாதிபதி சுட்டிகாட்டினார். அரசாங்கம் என்ற ரீதியில் தாம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்பில் கௌரவமான முறையில் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சபைக் கூட்டத்தை பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என்று அழைக்கப்படும் எட்வின் கிருஸ்ணாந்தராஜா கைது செய்யப்பட்டமையையும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டதையும் கண்டித்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றைய சபைக் கூட்டத்தை பகிஷ்கரித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எட்வின் கிருஸ்ணாந்தராஜாவை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பவும் அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.


மாகாண சபை உறுப்பினர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக சபை அமர்வு அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது. இன்றைய அமர்வில் முதலமைச்சர் சிவனேதுரை சந்திரகாந்தன் கலந்து கொள்ளவில்லை.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எட்வின் கிருஸ்ணாந்தராஜா கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து சென்ற இரகசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



புத்தம் புதிய அழகிய தெரிவுகளுக்கு...
சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ். வீதி
(தட்டா தெருச் சந்தி), யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 0421 Fax: 222 0421
526, 529, பருத்தித்துறை வீதி,
நல்லூர் (பின் வீதி),
யாழ்ப்பாணம். 021 222 1723
Email: nallur.saravana@gmail.com






பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கான விடுதி கடந்த 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் செனவிரட்ன செயலக விடுதியை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- எஸ்.கரன்)

## பதவியிலிருந்து ஓய்வு

(அல்வாய்)

யா/கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபர் பொ. அருமைச்சந்திரன் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

அவ்வெற்றிடத்துக்கு க.மனோகரன் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த 21 ஆம் திகதி முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஶ்ரீ-19)

## அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்றவருக்கு 7500 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்பனை செய்த நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரப் பகுதியில் வைத்து சாராயம் விற்பனை செய்த நபரையே யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிமன்றில் நேற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கை விசாரித்த் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஶ்ரீ-6)

## பொதுச்சபைக்கூட்டம்

யாழ்.மாவட்ட அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 2 ஆவது ஆண்டு பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக்கல்லூரி மண்டபத்தில் வி.ஶ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பிரதேச செயலர் பிரிவு சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஶ்ரீ)

யாழ்.செய்திகள்

## கட்டடம் இடிந்து விழுந்ததில் பணியாளர் ஒருவர் படுகாயம்

(கரவெட்டி)

நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிலைய கட்டட புனரமைப்பின் போது கட்டடம் இடிந்து விழுந்ததில் பணியாளர் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிலையத்தில் புனரமைப்பு வேலை நடைபெற்ற வேளை கீழ்நின்று பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியரான கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த ஆனந்தகுமார் ரமேஸ் (வயது27) என்பவரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். (ஶ்ரீ-24)

## பாம்பின் விஷம் கலந்த நீரைப் பருகியவர் மயக்கமடைந்து சிகிச்சைக்காக அனுமதி

(கரவெட்டி)

இறந்த பாம்பின் விஷம் கிணற்று நீரில் கலந்ததில் அதனைப் பருகிய ஒருவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கற்கோவளம் புனித நகர்ப்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டுக்கிணற்றில் சில தினங்களுக்கு முன் இறந்து கிடந்த பாம்பின் விஷம் கிணற்று நீரில் கலந்ததில் அதனைப் பருகியதனால் அப்பகுதியைச் சேர்ந்த எஸ்.அருணாவதி (வயது 33) என்ற குடும்பப் பெண்ணே மயக்கமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஶ்ரீ-24)

## இரு படகுகள் மோதி விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் நேற்று காலை இரு படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலத்த காயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் மருதங்கேணி கடற்பரப்பில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் தனது படகில் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற வேளை எதிரே நின்ற படகுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவத்தில் மருதங்கேணி வடக்கு தாளையடிப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை சுப்பிரமணியம் (வயது 60) என்ற குடும்பத்தரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (ஶ்ரீ-24)

## சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக் கிளில் சென்ற மல்லாவியைச் சேர்ந்த நபர் ஒருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் கொடிகாமப் பொலிஸார் ஆஜர் செய்தனர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா இந்த சாரதி மன்றில் குற்றத்தைக் ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஶ்ரீ-29)

## மதுபோதையில் ரகளை

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததோடு ரகளையிலும் ஈடுபட்ட மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர்.

இச்சம்பவம் நேற்று குருநகர் பகுதியில் இடம்பெற்றது. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர்கள் மூவரையும் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் ஏ.ஏ. ஆனந்தராசா ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஶ்ரீ-6)

## வாகனக் காப்புறுதிப் பத்திரமின்றி சென்ற சாரதிக்கு அபராதம்

(கரவெட்டி)

வாகனக் காப்புறுதிப் பத்திரமின்றி சென்ற வாகனச் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் சம்பவதினம் வாகனக் காப்புறுதிப் பத்திரமின்றி சென்ற வேளை குறித்த நபர் பருத்தித்துறை வீதிப் போக்குவரத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவ்வழக்கை விசாரித்த நீதிபதி திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரம் குறித்த சாரதி மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தை செலுத்த உத்தரவிட்டார். (ஶ்ரீ-24)

## இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு

(தெல்லிப்பழை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் பேரின்பநாயகம் சுபாகர் 104 வாக்குகளைப் பெற்று இளைஞர் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.

குறித்த தேர்தலில் 3 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற எஸ்.ஜெபநேசன் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகின்றமையால் குறித்த இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியமையால் மீளத் தேர்தல் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும். (ஶ்ரீ-2-53)

## தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் தின விழா

(தெல்லிப்பழை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினுடைய இவ்வாண்டிற்கான இளைஞர் தின விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.செந்தில்குமரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினுடைய உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பிப்பதுடன் சிறந்த செயற்பாடுகளைக் கொண்ட 10 இளைஞர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2-53)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 05

ஆசிரியர் :- எஸ்.ஏ.சந்திரபவன்,
கொழும்பு

## பகுதி - I

**01 தொடக்கம் 32 வரையிலான சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01) கீழுள்ள சொற்களுடன் பொருந்தும் படம் எது?

| நியாயம் | நேர்மை | நடுவுநிலைமை |
|---|---|---|



1) 2) 3)

02) கீழுள்ள சொற்களுடன் பொருந்தும் படம் எது?

| அடையாளம் | நிறுவனம் | குறியீடு |
|---|---|---|



1) 2) 3)


**கீழே 3ஆம் 4ஆம் வினாக்களில் உருக்களைக் கொண்ட மூன்று கூடுகள் தரப்படுகின்றன. அதிலுள்ள உருக்களின் அடிப்படையில் ஒரு கூடு சற்று வேறுபடுகின்றது. அக்கூட்டினைத் தெரிவு செய்க.**

03)

| கூடு A | கூடு B | கூடு C |
|---|---|---|
| 1 3 / 5 / 7 9 | அ B / 5 / A இ | D C / A / F H |

1) கூடு A
2) கூடு B
3) கூடு C

04)



கூடு A கூடு B கூடு C

1) கூடு A
2) கூடு B
3) கூடு C

**பின்வரும் கவிதையை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

*இருள் கிழித்து அவன் எழவே*
*இதழ் விரித்து இவள் மலர்வாள்*
*இவள் மலர்ந்த மணம் அறிந்து*
*சிறகடித்துத் தேனருந்த*
*பல நிறத்தாள் பறந்து வந்தாள்.*

05) இருள் கிழித்து எழுந்தவன் யார்?
1) நட்சத்திரம் 2) சூரியன் 3) சந்திரன்

06) இதழ் விரித்து மலர்ந்தவள் யார்?
1) முகம் 2) சிரிப்பு 3) பூ

07) சிறகடித்து வந்த பல நிறத்தாள் யார்?
1) வண்டு 2) தேனீ 3) வண்ணத்துப்பூச்சி

**நான்கு நண்பர்கள் 400 மீற்றர் ஓட்டப் போட்டியை ஓடி முடித்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| றொபர்ட் | ரஹீம் | ராம் | பாரத் |
|---|---|---|---|
| 47 செக்கன் | 45 செக்கன் | 44 செக்கன் | 50 செக்கன் |

08) இவர்களில் முதலிடத்தைப் பெற்றவர் யார்?
1) றொபர்ட் 2) ரஹீம் 3) ராம் 4) பாரத்

09) 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்ற ஒழுங்குமுறையைக் காட்டும் விடை யாது?
1) றொபர்ட், ரஹீம், ராம், பாரத்
2) பாரத், ராம், ரஹீம், றொபர்ட்
3) ராம், ரஹீம், றொபர்ட், பாரத்

**கீழ்வரும் அட்டவணையை அவதானித்து 10ஆம் 11ஆம் 12ஆம் வினாக்களின் விடைகளை தெரிவுசெய்க.**

| நிகழ்ச்சிகள் | பெண்கள் | ஆண்கள் | சிறுவர்கள் |
|---|---|---|---|
| நிகழ்ச்சி A | 425 | 225 | 350 |
| நிகழ்ச்சி B | 370 | 140 | 490 |
| நிகழ்ச்சி C | 240 | 230 | 530 |

ஒரு பிரதேசத்தில் வாழும் குறிப்பிட்ட 1000 பேரிடையே தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூன்றினது விருப்பத்தின் அடிப்படையில் நடாத்தப்பட்ட தகவல்களே மேலுள்ளவையாகும்.

10) சிறுவர்கள் அதிகம் விரும்பிய நிகழ்ச்சி எதுவாகும்?
1) நிகழ்ச்சி A 2) நிகழ்ச்சி B 3) நிகழ்ச்சி C

11) மூன்று நிகழ்ச்சிகளையும் அதிகம் விரும்பாத பிரிவினர் யார்?
1) பெண்கள் 2) ஆண்கள் 3) சிறுவர்

12) நிகழ்ச்சி A யை அதிகம் விரும்பிய பிரிவினர் நிகழ்ச்சி C யை விரும்பும் எண்ணிக்கை யாது?
1) 240 2) 230 3) 530



இதன் எதிர் எதிர் பக்கங்கள் ஒரே நிறமாகும். இது ஒரு பலநிற விளையாட்டுப் பந்தாகும்.




பந்து வெட்டிப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது

13) அந்தப்பந்தில் எத்தனை நிறங்கள் காணப்படும்?
1) இரண்டு 2) மூன்று 3) ஆறு

14) B பகுதியின் எதிர்ப்பக்கம் எதுவாக இருக்கும்?
1) A பகுதி 2) C பகுதி 3) E பகுதி

**பின்வரும் தகவல்களை வாசித்து 15ஆம் 16ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

பாலாவின் கடையில் 3 பென்சில்கள் 12 ரூபா

தீபனின் கடையில் ஒரு பென்சில் 5 ரூபா

15) இரு கடைகளுக்கும் இடையில் ஒரு பென்சிலின் விலையில் உள்ள வேறுபாடு எவ்வளவு ஆகும்?
1) ஒரு ரூபா 2) இரண்டு ரூபா 3) மூன்று ரூபா

16) தீபனின் கடையில் நான்கு பென்சில்கள் வாங்கும் பணத்திற்கு பாலாவின் கடையில் எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?
1) இரண்டு 2) மூன்று 3) ஐந்து

**17ஆம் 18ஆம் 19ஆம் வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்க.**

17) 9, ஜனவரி 2009 — இத்தினத்தில் இருந்து சரியாக மூன்று வாரங்கள் விடுமுறை பெறும் சாரங்கன் மீண்டும் வேலைக்குச் செல்லும் தினத்தை சரியாகக்காட்டும் விடை எது?
1) 29, ஜனவரி 2009 2) 30, ஜனவரி 2009 3) 31, ஜனவரி 2009

18) சாரங்கன் மீண்டும் வேலைக்குச் சென்றது ஒரு புதன் கிழமை எனின், அவன் விடுமுறை பெற்ற தினம் என்ன கிழமையாக இருக்கும்?
1) சனிக்கிழமை 2) வியாழக்கிழமை 3) புதன்கிழமை

19) விடுமுறை பெற்ற மூன்று வாரகாலத்தினுள் வந்துள்ள சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த வாரநாட்கள் எத்தனையாகும்?
1) 16 நாட்கள் 2) 17 நாட்கள் 3) 18 நாட்கள்

**இந்த ஐந்து உருக்களுடனும் தொடர்புடைய 20ஆம் 21ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




20) மேலுள்ள 5 உருக்களில் ☆ இவ்வுரு அதிகதடவைகள் இடம்பெற்றுள்ள கூட்டினைத் தெரிவு செய்க.



1) 2) 3)

21) △ இவ்வுருக்களின் எண்ணிக்கையிலிருந்து ⬠ இவ்வுருக்களின் எண்ணிக்கையைக் கழிக்கும் போது ○ இவ்வுருக்களின் எண்ணிக்கை விடையாக வரும் கூடு எது?



1) 2) 3)

A, B, C, D ஆகிய நான்கு நண்பர்கள் தமது சட்டைப்பைகளுள் நிறமாபிள்கள் வைத்திருக்கின்றனர். ஒவ்வொருவரிடமும் மூன்று மாபிள்களே தற்போது உள்ளன

22) B என்பவர் ஏனைய மூவரிடமும் தலா ஒவ்வொரு மாபிள்களை வாங்கி தனது சட்டைப்பையில் போட்டால் தற்போது அவரிடமுள்ள மாபிள்கள் எத்தனை?
1) 4 மாபிள்கள் 2) 5 மாபிள்கள் 3) 6 மாபிள்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

# க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 610 பேரின் பெறுபேறுகள் இரத்து

(கொழும்பு)

கடந்தமுறை கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 610 பேரின் பெறுபேறுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட 6 ஆயிரத்து 804 மாணவர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட 610 பேரின் பெறுபேறுகள் இரத்துச் செய்யப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்ட மாணவர்களுள் குறித்த 610 பேருக்கும் எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானதென உறுதிப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு முடியாமற் போயுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை நிலையத்தில் முறையற்ற விதத்தில் நடந்துகொள்ளுதல், பரீட்சைகள் மேற்பார்வையாளர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல் மற்றும் பரீட்சை மோசடியில் ஈடுபடுதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த மாணவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

(ஸ்ரீ-2)

# இலங்கையின் விவகாரங்களில் இந்திய தலையீடு குறித்து கருத்தரங்கு

## ஜே.வி.பி. ஏற்பாடு

இலங்கையின் அரசியல், பொருளாதார, பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு குறித்து விழிப்புணர்வூட்டுவதற்காக பல தொடர் கருத்தரங்குகளை நடத்தவுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இலங்கை, இந்திய வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தையின் பின்னர் இரு நாடுகளாலும் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையானது இலங்கை எந்தளவுக்கு இந்தியாவின் அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தியதாக ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் செல்வா தெரிவித்தார்.

அந்த அறிக்கையை எவரும் கவனமாக வாசித்தால் இந்தியாவின் கட்டளைகளின்படி செயற்பட அரசாங்கம் இணங்கியுள்ளது தெளிவாகும். அரசாங்கம் ஒருபுறம் மேற்குலகின் அழுத்தத்திற்குட்பட்டுள்ளது. மறுபுறம் இந்தியாவின் அழுத்தத்திற்குட்பட்டுள்ளது. இந்த ஆபத்து குறித்து நாம் மக்களுக்கு விளக்க வேண்டும் என ரில்வின் சில்வா தெரிவித்தார்.

(ச-5)

# உத்தேச தனியார் ஓய்வூதிய சட்டமூலம் பற்றி அறியாதோர் எதிர்க்கின்றனர்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

(கொழும்பு)

உத்தேச தனியார் ஓய்வூதிய சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை அறியாமல் தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இச்சட்டமூலத்தை தன்னைத் தலைவராகக் கொண்ட தொழிற்சங்கம் வரவேற்பதாக அவர் குறிப்பிட்டார்.


தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த உத்தேச சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்து பேசுவார். அதன்போது தொழிற்சங்கங்களினால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகளைக் குறித்த சட்டமூலத்தில் இணைத்துக்கொள்வார் என அமைச்சர் தெரிவித்தார்.

இச்சட்டமூலத்தை எதிர்க்க வேண்டிய தொழில் வழங்குநர்கள் அதை எதிர்க்காமலுள்ள நிலையில் தொழிற்சங்கங்கள் தங்களின் நலன்களுக்காக அதை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திடம் பணமில்லை என்பது உண்மைதான். அதற்காக தனியார் துறையினரின் பணத்தை ஓய்வூதியம் என்ற பெயரில் கொள்ளையடிக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)



யா/நீர்வேலி றோ.க.த.க. பாடசாலையில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் UMCOR நிறுவன திட்டமிடல் உதவியாளர் வை.பாலகுமார் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதனைப் படத்தில் காணலாம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கீரிப்பூண்டு/ கீரிப்புரண்டான்

Botanical Name: Ophiorrhiza mungos
Family: Rubiaceae
English: Indian snake root/ mungoose
Sinhala: Wajekaweriya

இச்செடியானது 45 தொடக்கம் 60 செ.மீ உயரம்வரை வளரக்கூடியதாகும். உருளை வடிவ செங்குத்தான சிறிய அளவிலான கிளைகளைக் கொண்டதாகும். தனியிலை, எதிரிலை அடுக்கம் 10 தொடக்கம் 20 செ.மீ நீளமுடைய வேலுருவான இலையின் நுனிப்பகுதி ஒடுங்கியதாகவும் காணப்படும். சிறிய இலைக்காம்புகளைக் கொண்டது.

இலையின் மேற்பக்கம் பிரகாசமான பச்சைநிறம் கொண்டது. பூக்கள் இருபாலானவை, ஒழுங்கானவை, வெள்ளைநிறம் கொண்டவை. சிறிய பூக்களாகும். தட்டையான பழங்கள் நிறைய விதைகளைக் கொண்டிருக்கும். வருடம் முழுவதும் பூக்களை அவதானிக்கலாம்.

### பரம்பலும் இனவிருத்தியும்

இதனை விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் கூடுதலான காடுகளிலும், மலைகளிலும் காணப்படும். பொதுவாக நிழலான, ஈரலிப்பான பகுதியில் இதன் பரம்பலைக் காணலாம்.

### மருத்துவப் பயன்கள்

★ இதன் இலை, வேர், பட்டை யாவும் மருத் துவ குணம்கொண்டவை. பாம்புக்கடி, நாய்க்கடி முதலியவற்றிற்கு சிறந்த எதிர் மருந்தாக சுதேச மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய மூலிகையாகும்.

★ இதன் வேர்களை சேகரித்து சிறுசிறு



துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பொடித்து. அரித்து வைத்துக் கொள்ளவும். 5 தொடக்கம் 8 கிராம் அளவு தினம் இருவேளை ஒச்சுக்குளி, குணம் குறையும் வரை கொடுக்கலாம். அல்லது உடன் சேகரித்த வேரை நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக்கி மை போல அரைத்து 5 கிராம் அளவும் எடுக்கலாம்.

★ வேர்ப்பட்டையை அரைத்து 8 கிராம் அளவு இரவில் பசுவின் பாலில் கலக்கி 3 நாட்கள் கொடுக்க, மலச்சிக்கல் தீரும். தூக்கம் வரும்.

★ ஒரு பங்கு இலைக்கு பத்துப் பங்கு நீரிலிட்டுக் காய்ச்சி வடிகட்டி 30 தொடக்கம் 60 மில்லி அளவு குடிக்க பசியை உண்டாக்கி, உடற்பலத்தைக் கொடுக்கும்.

★ இதன் இலைகளை நன்கு சுத்தம் செய்து பசைபோல அரைத்து விரணங்கள்/புண்களிற்கு பற்றிட புண்கள் விரைவில் ஆறும்

★ கீரிப்பூண்டு தூக்கத்தை ஏற்படுத்தும் சிறந்த மூலிகையாகும். ஒருபங்கு கீரிப்பூண்டின் வேரிற்கு 4 பங்கு நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சிய குடிநீரில் 30 தொடக்கம் 60 மில்லி அளவு இரவில் அருந்த நல்ல தூக்கம் ஏற்படும்.

திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

குறிப்பு: கீரிபுரண்டான் என்ற பெயர் வரக் காரணம் கீரியும் பாம்பும் தம்மில் எதிரிகளாதால் கீரியும் பாம்பும் சண்டையிட்டு, பாம்மைக் கீரி கடித்துக் கொன்ற பிறகு, கீரி இப்பூண்டில் விழுந்து புரண்டு பாம்பின் நஞ்சை போக்கிக் கொள்ளும் என்ற சரித்திரமும் இப்பூண்டிற்கு உண்டு. இதன் வேரை கையில் பொத்தி வைத்துக் கொண்டால் பாம்புக்கடியின் நஞ்சு உடலில் தங்காது என்றும் சித்தர் ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கீரிப்பூண்டானது வடபகுதி வைத்தியர்களைவிட தென் பகுதி ஆயுள்வேத பரம்பரை வைத்தியர்களால் இன்றும் விஷக்கடிக்கு பயன்படுத்தப்பட்டுவரும் முக்கிய மூலிகையாகும்.

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

பொதுவான உறுப்புரை 3இன் முக்கிய ஏற்பாடுகளை மேற்கோள் காட்டுவது பொருத்தமானதாகும்.

1. ஆயுதங்களைக் களைந்து அல்லது நோயினால், காயங்களினால் தடுத்து வைக்கப்படுவதினால் அல்லது வேறுகாரணங்களுக்காக தொடர்ந்தும் பங்கேற்க முடியாத படைவீரர்களை உள்ளிட்ட எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடாதவர்கள் சாதி, நிற, சமய, ஆண், பெண் பாகுபாடு, பிறப்பு அல்லது செல்வம் அல்லது வேறு ஏதேனும் அது போன்ற காரணங்களுக்காக எந்த ஒரு வேற்றுமையும் காட்டப்படாது சகல சந்தர்ப்பங்களிலும் கருணையுடன் நடத்தப்படவேண்டும்.

இதற்காக, மேற்சொல்லப்பட்டவர்கள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் எந்தவொரு நேரத்திலும் மற்றும் எந்தவொரு இடத்திலும் தடை செய்யப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் அப்படியே இருக்கும்.

அ) குறிப்பாக சகல விதமான கொலைகள், உறுப்பழிவு, கொடூரமாக நடத்தப்படுதல் மற்றும் சித்திரவதை போன்ற உயிருக்கும் ஆளுக்கும் எதிரானவன்முறை.

ஆ) பணயக்கைதிகளாக பிடித்தல்

இ) குறிப்பாக அவமானப்படுத்தும் மற்றும் இழிவுபடுத்தும் விதத்தில் நடத்துவதை கொண்ட சொந்தக் கௌரவத்துக்கு பங்கம் விளைவித்தல்

2. காயமடைந்தோரும் நோயாளிகளும் சேகரிக்கப்பட்டுப் பராமரிக்



கப்படவேண்டும்.

65) 183. சர்வதேச சட்டத்தின் உள்ளடக்கம் மற்றும் அதன் சம்பிரதாயம் பற்றிய கருத்தை நிர்ணயிப்பதற்காக அரச செயற்பாடு மற்றும் மனப்பான்மை ஆகியவற்றை முழுமையாக பகுப்பாய்வு செய்யும் ஐ.சி.ஆர்.சி.இன் ஆய்வான "கஸ்டம இன்ரநேஷனல் ஹுமனிடேரியன் லோ" (2005) அத்துடன் சர்வதேச மற்றும் தேசிய சட்டத்துறை தீர்மானங்கள் மற்றும் சர்வதேச குற்றவியல்குழுக்களின் சட்டம் மற்றும் சட்ட ஆய்வுத்துறை அகியவற்றை உள்ளிட்ட பல்வேறு மூலங்வளங்களில் குழு தங்கியிருந்தது.

**2. சர்வதேச மனித உரிமைகள் சட்டம்**

184. அனேகமான நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளபடியும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பலஸ்தீன நிலப்பரப்பில் மதில் ஒன்றைக் கட்டுவது தொடர்பான சட்டப் பின்விளைவுகள் என்ற 2004 ஆம்ஆண்டின் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனைக்கருத்தினால் உறுதிப்படுத்தப் பட்டவாறும் ஆயுதம் ஏந்திய மோதல் நிலைமைகளில் மனித உரிமைகள் சட்டம் எற்புடையதாகிறது. கொங்கோ நிலப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகள் பற்றி 2005ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தீர்ப்பில் இதே நியாயத்தை பிரயோகித்து ஆயுதம் தாங்கிய மோதலின்போது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்பற்றிய சர்வதேச நடைமுறை மரபினை உகண்டா மீறியுள்ளது எனக்கண்டது.

185. ஆயுதம் ஏந்திய மோதலுடன் சம்பந்தப்பட்ட நம்பகமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் விதிகள் மீது குழு அதன் கவனத்தை ஈடுபடுத்தி அவற்றுள் பல மனித உரிமைகள் மீறல்களுக்கு சமமாகிறது என்பதை இனங்காண்கிறது. 2009 மே 19ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து மனிதஉரிமைகள் சட்டம் தோதான ஒரே சட்ட தொகுப்பாக ஆகியுள்ளது.

இவ்வாறாக யுத்தத்தை நடத்துவதற்கு புறம்பான மனிதஉரிமைகள் மீறல்கள் பற்றி மாத்திரமே குழு நடவடிக்கை எடுக்கிறது.

186. சிவில், கலாசார, பொருளாதார, அரசியல் மற்றும் சகஉரிமைகள் விவகாரங்கள் சம்பந்தப்பட்ட அடிப்படை சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகள் மற்றும் சித்திரவதையை தடை செய்யும் அத்துடன் பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய உடன்படிக்கைகள் ஆகியவற்றிற்கு இலங்கை ஒரு தரப்பாகவுள்ளது. ஐசிசிபிஆர். உடன்படிக்கையின் 4ஆம் உறுப்புரையின் கீழான சில ஏற்பாடுகளை தள்ளுபடி செய்வதாக இலங்கை 2000 மே 20 ஆம்திகதி செயலாளர் நாயகத்துக்கு அறிவித்ததோடு 2010 ஜூன் 4 ஆம் திகதி கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் அத்துடன் வழக்கைத் துரிதப்படுத்துதல் ஆகிய உரிய செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட உறுப்புரை 9 (3) இனைத் தவிர்ந்த உடன்படிக்கையின் எல்லா ஏற்பாடுகளிலிருந்தும் நீங்கிக்கொள்வதாக செயலாளர்நாயகத்துக்கு இலங்கை அறிவித்தது.

187. தள்ளுபடி செய்வது சட்டப்படி செல்லுபடியாகுமா என்பது பற்றி நிலவும் நிச்சயமற்ற தன்மையை கருத்தில் கொண்டு குழு ஐ.சி.சி.பி.ஆர். இன் பெருத்தமான சகல ஏற்பாடுகளையும் பின்வருமாறு ஆராய்கிறது.

66) 188. எல்.ரி.ரி.ஈ. இனைப் பொறுத்த வரையில் நாடல்லாத பாத்திரங்கள் விதிமுறைகளுக்கேற்ப மனித உரிமைகள் உடன்படிக்கை ஒன்றிற்கான தரப்பினராக முடியாத போதிலும் நாடொன்றின் இடப்பரப்பினுள் நடைமுறையிலான கட்டுப்பாட்டை கொண்டிருக்கும் நாடல்லாத குழுக்கள் அப்பிரதேசத்தில் மனிதர்களின் அடிப்படை மனித



உரிமைகளை மதிக்கவேண்டும் என்பது இப்போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவதொன்றாகும்.

பாதுகாப்புச் சபையை உள்ளிட்ட ஐக்கியநாடுகளின் பல்வேறு அமைப்புக்கள் அத்தகைய பாத்திரங்கள் மனித உரிமைகள் சட்டத்தை மதிக்கவேண்டுமென திரும்பத்திரும்ப வலியுறுத்தியுள்ளன. சர்வதேச பாத்திரங்களுக்கிடையே இவ்விடயம் பற்றிய கருத்து முரண்பாடுகள் உள்ளன என்பதை குழு இனங்கண்ட போதிலும், குறைந்த பட்சம் உயிர் வாழ்வதற்கான உரிமை மற்றும் பௌதிக பாதுகாப்பு மக்களின் முழுமையான தன்மை அத்துடன் சித்திரவதை மற்றும் கொடூரத்தன்மை , மனிதத்தன்மையற்ற அல்லது இழிவாக நடத்துதல் மற்றும் அத்தகைய தண்டனை ஆகியவற்றிலிருந்து விடுதலை போன்றவற்றை உள்ளிட்ட அனேகமான மனித உரிமைகளை அதன் அதிகாரத்துக்குள் இருக்கும் மக்களுக்கு உறுதிப்படுத்த எல்.ரி.ரி.ஈ. கடமைப்பட்டுள்ளது என்ற கருத்தை குழு கொண்டுள்ளது.

**ஆ) பொருத்தமற்ற போர்நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டம்.**

189. இந்த யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தரப்பினரும் பகிரங்கமாக வெளியிட்ட குறிக்கோள்களோ (அரசாங்கத்தைப் பொறுத்தவரை பயங்கரவாதத்திற்கு எதிராகப்போர்தொடுத்தல் மற்றும் எல்.ரி.ரி.ஈ. இனைப் பொறுத்தவரை தனிநாட்டிற்காகப்போர் புரிதல்) இரண்டு தரப்பினரும் கடைப்பிடித்த நடைமுறைகளின் பொருத்தமற்ற தன்மையோ தரப்பினருக்கு சர்வதேச மனிதாபிமான சட்டம் ஏற்புடையதாகுவதில் தாக்கத்தை ஏற்படுத்தாது. தனது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவும் பயங்கரவாதத்தில் ஈடுபடக்கூடிய கிளர்ச்சியாளர்களை உள்ளிட்ட ஆயுதம்தாங்கிய தாக்குதல்களில் இருந்து அதனைப் பாதுகாத்துக் கொள்ளவும் சர்வதேச சட்டத்தின் கீழ் நாடொன்றுக்கு உரிமை உண்டு.

அந்த நோக்கங்களை அடைவதற்கு எத்துறையாவது பயன்படுத்துவதை அந்நோக்கங்கள் நியாயப்படுத்தாது. அத்தகைய சட்டபூர்வமான தேவைகளுக்கான சகல நடவடிக்கைகளும் சர்வதேச சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு இயைபாக இருத்தல்வேண்டும்.

190. இவ்வாறாக சர்வதேச மனிதாபிமான சட்டம் எல்.ரி.ரி.ஈ. இனைப்போன்றதொரு அச்சுறுத்தலை எதிர்நோக்கும் நாடுகளின் நியாயபூர்வமான கவலைகளை மதிக்கிறது. பல்வேறு காரணங்களுக்காக சர்வதேச மனிதாபிமான சட்டத்துக்கு, அதுவும் சர்வதேச சட்டத்திற்கு அந்த யுத்தம் அப்பாற்பட்டது என கடந்த பல வருடங்களாக இலங்கையில் சிவில்யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இருதரப் பினரும் விடுத்த அறிக்கைகள் பிழையானதாகும். மேலும் ஒரு தரப்பினரின் மீறல்கள் பொதுவான நியதியின்படி மற்றத்தரப்பினர் சட்டத்தின் கீழான அதன் கடப்பாடுகளை இடைநிறுத்துவதற்கு அனுமதி அளிக்காது என்பது சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் அடிப்படையான, நன்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான கூற்றகும்.

**67) இ) சட்டரீதியிலான பொறுப்புவகைகள்**

191. குற்றச்சாட்டுக்களின் சட்டபூர்வமான சுபாவத்தை ஆராய்வதில் சர்வதேச மனிதாபிமான சட்டம் மற்றும் மனிதஉரிமைகள் சட்டம் கடப்பாடுகளை விதிக்கும் பல்வேறு குழுக்களையும் அதன்படி குற்றம் சாட்டப்பட்ட மீறல்களுக்கு பொறுப்பு யார் என்பதையும் குழு கவனத்திற் கொள்ளவேண்டியுள்ளது.

மூன்று வகையான பொறுப்புக்களை குழு கவனத்திற்கொள்கிறது. அரசின் பொறுப்பைப்

**தமிழாக்கம் தொடர் 24**

பொறுத்தவரை குற்றம் சாட்டப்பட்ட மீறல்கள் உண்மையெனக் கண்டறியப்பட்டால் அவற்றிற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பா? என்பதாகும். சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை அரசின் செயல்களுக்கு மாத்திரம் அரசின் பொறுப்பு தோதானதாகும்.

(தொடரும்)

# போர் வெற்றி தொடர்பான கருத்தரங்கில் ஐ.நா. பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்

## இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய அழைப்பு

(கொழும்பு)

படைத்தரப்பினர் மீது குற்றம் சுமத்தியுள்ள ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் பிரதிநிதிகள் உண்மைத்தன்மையை அறிந்து கொள்வதற்காக போர் வெற்றி தொடர்பான அனுபவப் பகிர்வு கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியும் என படைத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

வன்னிப் போர் வெற்றி தொடர்பான அனுபவங்களை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் முகமாகவே இந்த போர் வெற்றி தொடர்பிலான அனுபவப் பகிர்வு குறித்த சர்வதேச கருத்தரங்கு கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படவில்லை.

அதேவேளை நிபுணர் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கும் வகையில் படைத்தரப்பினர் ஓர் அறிக்கையினைத் தயாரித்து வருவதாக கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

ஆயினும் கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ள போர் வெற்றியின் அனுபவப் பகிர்வு தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் சீனாவின் முன்னணி ஆயுதத் தளபாட உற்பத்தி நிறுவனங்களின் தயாரிப்புக்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. சீனாவின் முன்னணி நிறுவனங்களால் சீனா பொலி டெக்னோலஜி மற்றும் சீனா தொழில்நுட்ப கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தயாரிப்புக்களே காட்சிப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைத்தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் உட்பட 42 நாடுகளின் படை உயரதிகாரிகளும் இராஜதந்திரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி இரு நிறுவனங்களும் இக்கருத்தரங்கிற்கு அனுசரணை மற்றும் ஏற்பாட்டு உதவிகளை வழங்குகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின் போது கிடைத்த வெற்றியை தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு முன்னுதாரணமாகப் பின்பற்றுவது பிழையான ஒரு வழிமுறை என சர்வதேச ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள நிலையில் படைத்தரப்பினர் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பம்பலப்பிட்டியில் மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி ஆர்.எ.டி.மாவத்தைக்கு அண்மையில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் மோதி குறித்த நபர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்துக்குப் பின்னர் மோட்டார் சைக்கிள் ஓட்டுனர் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்வதற்காக பொலில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் வாழ்க்கைச் செலவுக்கு போதுமானதல்ல

## முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வதாக முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னதாகக் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் தற்போது தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதாக முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் லலித் ஒபேசேகர தெரிவித்தார்.

தற்போதைய வாழ்க்கை செலவுக்கமைய அந்தச் சம்பளத் தொகை போதுமானது அல்லவென்பதை தமது சம்மேளனம் ஏற்றுக் கொள்வதாக அவர் கூறினார்.

புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்தப்படும் என முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் தொழிற்சங்கங்கள் மற்றும் அதன் அங்கத்தவர்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிலேயே அந்த சம்பள உயர்வு அமையும் என் லலித் ஒபேசேகர தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் மேலும் கூறினார்.

இதேவேளை தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலான மேலும் ஒரு பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளதாக கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள சங்கங்கள் தெரிவிக்கின்றன.

முதலாளிமார் சம்மேளனத்துடன் ஏற்கனவே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடின்றி முடிவடைந்த நிலையில் இன்றைய பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களும் ஏனைய தொழிற்சங்கங்களும் வலியுறுத்தி வருகின்றன. (ஸ்ரீ-2)

## வேளாங்கன்னி ஆலய பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பொன் தெற்கு அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய கொடியேற்றம் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் தினமும் நடைபெற்று எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவப் பவனி இடம் பெறும் (ஸ்ரீ-2)

# பளைக் கோட்டமட்ட தமிழ்மொழி கலைத்திறன் போட்டி முடிவுகள்

பளை கோட்டமட்ட தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**பிரிவு - 1**

**பேச்சு**

தி.அனிஸ்ரன் (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), ர.சுதர்சனா (கிளி/தர்மக்கேணி அ.த.க.பாடசாலை), செ.கின்சிகா (கிளி/சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலை)

**வாசிப்பு**

ச.தரணிகா (கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை), கு.திவ்யா (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), க.வினோயன் (கிளி/மாசார் அ.த.க.பாடசாலை)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

மு.குகராம் (கிளி/பளை மத்திய கல்லூரி), ச.லோஜினி (கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை), அ.பவித்திரா (கிளி/சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலை)

**இசையும் அசைவும்**

ம.டிலைக்ஷனா (கிளி/கோவில்வயல் சி.சி. .க. பாடசாலை), ஜே.அலைக்சா (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), பி.தர்சினி (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை)

**பாவோதல்**

கு.சாயித்தியா (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), மோ.சிந்துஜா (கிளி/சோரன்பற்று சி.சி.த.க.பாடசாலை), க.கீர்த்தனா (கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை)

**பிரிவு - 02**

**தனி இசை**

நி.சிந்துஜன் (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை), தி.கஜேந்தினி (கிளி/பளை மத்திய கல்லூரி), வே.றஜிதா (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்)

**பேச்சு**

இ.லிதர்சன் (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம், வ.அபிலாசா (கிளி/பளை மத்திய கல்லூரி), ஜெ.அறிவாசன் (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை)

**வாசிப்பு**

வி.கம்சாயினி (கிளி/பளை மத்திய கல்லூரி), உ.தர்ஷிகா (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை), அ.அபியூட் (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை)

**பாவோதல்**

சி.ஜதுஷா (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), நி.நிலானி (கிளி/தர்மக்கேணி அ.த.க. பாடசாலை)

**நடனம் (தனி)**

வ.நிசானி (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை), க.அஜந்தினி (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை)

**பிரிவு - 03**

**தனி இசை**

பொ.கயலினி (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), அ.ஆன்டிலக்ஷனா (கிளி/பளை மத்திய கல்லூரி), சோ.லோயினி (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்)

**பேச்சு**

ம.மதீசன் (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), த.றெஜினா (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), ம.டயானா (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை)

**பாவோதல்**

சு.ரூபிகா (கிளி/சோரன்பற்று கணேசா வித்தியாலயம்), இ.சாரங்கா (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை)

**நடனம் (தனி)**

அ.பிரியபேமி (கிளி/பளை மத்திய கல்லூரி)

**நடனம் (குழு) - செம்பு நடனம்**

கிளி/கோவில்வயல் சி.சி.த.க. பாடசாலை

**பிரிவு - 04**

**தனி இசை**

ம.நிகிதன் (கிளி/பளை மத்திய கல்லூரி), ச.பிரதீபா (கிளி/பளை றோ.க.த.க. பாடசாலை), லோ.விவேசனா (கிளி/மாசார் அ.த.க. பாடசாலை)

**பேச்சு**

த.கவிசா (கிளி/பளை மத்திய கல்லூரி), வி.விஜயமாலினி (கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை), பா.பவித்திரா (கிளி/பளை றோ.க.த.க பாடசாலை)

**பாவோதல்**

வி.சிந்துஜா (கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை)

**பிரிவு-05**

**தனி இசை**

ச.லவ்லி (கிளி/பளை மத்திய கல்லூரி). (ஸ்ரீ)



பௌத்த, இந்து கலாசார மண்டப திறப்பு விழாவின் நிகழ்வை முன்னிட்டு பூசை வழிபாட்டிற்காக விருந்தினர்கள் வரணி சிட்டிவேரம் கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு அழைத்து வரப்படுவதையும் வண.அத்துரவிஜய ரத்ன தேரர் மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)







இந்து, பௌத்த கலாசார பேரவை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினரும் பௌத்த குருமாருமான வண. அதுரலிய ரத்தின தேரர் பேரவையை நாடாவெட்டி திறந்து வைப்பதையும் கலந்து கொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

## சீனா மற்றும் ரஷ்யாவிடம் சில கோரிக்கைகள் முன்வைக்கப்படும்

### தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுடன் சில கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கட்சி அறிவித்துள்ளது.

தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்குமாறு இலங்கையை வலியுத்துமாறு சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிடம் தாம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். யுத்தம் காரணமாக இடம்பெற்ற காலத்திலும் பாதுகாப்புப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கப்பட்ட காலப்பகுதியிலும் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்கியிருந்தன.

முதல் கட்டமாக இலங்கைக்கான சீன மற்றும் ரஷ்ய தூதுவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் பின்னர் அழைப்பு விடுக்கப்பட்டால் குறித்த இரண்டு நாடுகளுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை விளக்குவதற்கு தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்கு ஆதரவளித்த நாடுகள் என்ற ரீதியில் யுத்தத்தின் பின்னரான நிலைமைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இரண்டு உறுப்பினர்கள் சீனாவிற்கு சென்று அந்நாட்டின் வெளிவிவகாரக் கொள்ளைகள் தொடர்பில் ஆராய்ந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தற்போதைக்கு இந்திய தலைவர்களை சந்திக்கும் உத்தேசம் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## அரசியல்வாதிகளுக்கு எதிரான ஊழல் மோசடி விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் சில முக்கிய அரசியல்வாதிகள் மற்றும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் மோசடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊழல் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணை ஆணைக்குழுவின் தலைமைப் பதவி தொடர்பான சர்ச்சையினால் விசாரணைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

எனினும் அண்மையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட புதிய இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு, முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மி ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடியில் ஈடுபடுபவர்களை சுற்றி வளைக்கும் மூன்று தேடுதல் வேட்டை நடத்தப்பட்டதாகவும் இதன்மூலம் மூன்று பேரை கைது செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடித் தவிர்ப்பு பிரிவினால் கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தராதரம், பதவி நிலையை கருத்திற் கொள்ளாது விசாரணை நடத்தப்படும் எனவும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் எந்தெந்த அரசியல்வாதிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்பது குறித்த தகவல்களை வெளியிட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இலஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பில் அச்சமின்றி முறைப்பாடு செய்ய வேண்டியது பொதுமக்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

## 2011.05 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1659-ரிச்சார்ட் குரெம்வெல் இங்கிலாந்தின் ஆட்சிக் காவலர் பெருமகன் (Lord Protector) பதவியைத் துறந்தார். பொது நலவாய இங்கிலாந்தின் இரண்டாவது குறுகிய கால அரசு ஆரம்பமானது.

★ 1810- ஆர்ஜென்டீனாவில் இடம்பெற்ற புரட்சியின் போது ஆயுதம் தரித்த பியூனஸ் அயரஸ் மக்கள் ஸ்பெயின் ஆளுநரை வெளியேற்றினார்கள்.

★ 1812-இங்கிலாந்தில் ஐரோ என்ற இடத்தில் இடம்பெற்ற சுரங்க வெடிவிபத்தில் 96 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1837- கியூபெக்கில் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராக நாட்டுப்பற்றாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்.

★ 1865- அலபாமாவில் மொபைல் என்ற இடத்தில் தொழிற்சாலையில் இடம்பெற்ற வெடிப்பில் 300 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1895-போர்மோசா குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1953- நெவாடாவில் ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவதும் கடைசியுமான அணு ஆற்றலினாலான பீரங்கியைச் சோதித்தது.

★ 1955- ஐக்கிய அமெரிக்காவில் கன்சாஸ் மாநிலத்தில் உடால் என்ற சிறு நகரை இரவு நேர சூறாவளி தாக்கியதில் 80 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1961-அப்பல்லோ திட்டம்: பத்தாண்டுகளில் இறுதிக்குள் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் ஐக்கிய அமெரிக்காவின் திட்டத்தை ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி அமெரிக்கக் காங்கிரசில் அறிவித்தார்.

★ 1963-அடிஸ் அபாபாவில் ஆபிரிக்க ஒன்றியம் உருவானது.

★ 1966- எக்ஸ்புளோரர் 32 விண்வெளிக்கு ஏவப்பட்டது.

★ 1977-ஸ்டார் வோர்ஸ் திரைப்படம் வெளிவந்தது.

★ 1979- ஐக்கிய அமெரிக்காவின் ட்சி-10 விமானம் ஒன்று சிக்காகோவில் விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த 271 பேரும் தரையில் இருவரும் கொல்லப்பட்டனர்.

★ 1982-போக்லாந்து போரில் கவே ண்ட்ரி என்ற ஆங்கில கப்பல் மூழ்கியது.

★ 1985-வங்காள தேசத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 10 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1997-சியேரா லியோனியில் இடம் பெற்ற இராணுவப் புரட்சியில் ஜனாதிபதி அகமது கப்பா பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 2000-லெபனானில் 22 ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த இஸ்ரேல் இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறினர்.

★ 2001-அமெரிக்காவைச் சேர்ந்த 32 வயது எரிக் வைஹன்மாயர் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதலாவது கண் பார்வை இழந்த மனிதர் என்ற பெருமையைப் பெற்றார்.

★ 2002- சீன விமானம் ஒன்று தாய்வானில் நடுவானில் வெடித்துச் சிதறியதில் 225 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2002- மொசாம்பிக்கில் தொடரூந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 197 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1458-மஹ்மூத் பேகடா, குஜராத் சுல்தான் (இ.1511)

★ 1865- பீட்டர் சீமான், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர் (இ.1943)

★ 1866-மு.சி.பூரணலிங்கம்பிள்ளை, தமிழறிஞர் (இ.1947)

★ 1878- சோமசுந்தரப் புலவர், ஈழத்துப் புலவர் (இ.1953)

★ 1918-நா.முத்தையா ஆத்மஜோதி, இதழாசிரியர் (இ.1995)

★ 1933- அநு. வை. நாகராஜன், ஈழத்து எழுத்தாளர்.

★ 1954-முரளி, மலையாள நடிகர் (இ.2009)

### இறப்புக்கள்

★ 1988- ஏர்ணஸ்ட் ருஸ்கா, ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1906)

★ 2005-சுனில் தத், இந்திய நடிகர் அரசியல்வாதி (பி.1929)

### சிறப்பு நாட்கள்

★ ஆர்ஜென்டீனா- மே புரட்சி நாள்

★ சாட், லைபீரியா, மாலி, மவ்ரித்தானியா, நமீபியா, சாம்பியா, சிம்பாப்வே- ஆபிரிக்க விடுதலை நாள்

★ லெபனான்- விடுதலை நாள்(2000)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



“ஒரு பார்ட்டியில் கலந்து கொண்டேன். நான் மிகவும் மதிக்கும் ஒரு நபர், தன் போட்டியாளரை கவிழ்ப்பதற்கான செய்திகள் பற்றி, மதுவின் ஆதிக்கத்தில் தன்னை மறந்து உளறிவிட்டார். திடுக்கிட்டுப்போனேன். இத்தனை நாகரிகமானவர் ஏன் இப்படி மிருகம் போல் நடந்து கொண்டார்?”

எதற்காக மிருகங்களை வம்புக்கு இழுக்கிறீர்கள்?

எந்தப்புலியாவது தன்னை நல்ல புலியாக காட்டிக்கொள்ள வேண்டும்

## ஆன்மீகம் 05

என்று தன் இயல்பை ஒளித்து, மாறாக நடந்துகொள்ள முயல்கிறதா? எந்த எருதாவது தன்னைக் கெட்ட எருதாக காட்டிக்கொள்ளக் கூடாது என்று கபடமாக நடந்து கொள்கிறதா?

பசிஎடுத்தால்உணவு, இச்சை பிறந்தால் இணை என இரண்டே வேட்கைகளில்தான் விலங்குகளுக்குள் சண்டை நடக்கிறது. அது மிருக இனம், உயிர் பிழைத்திருப்பதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் இயற்கை விதித்த விதி. மற்றையபடி, மிருகங்கள் ஒன்றைப்பார்த்து மற்றது பொறாண்மைப்படுவதில்லை. வஞ்சம் கொள்வது இல்லை. சதிச்செயலில் ஈடுபடுவதில்லை.

மனிதன்தான் தன் இயல்பை உணராமல் தடுமாறுகின்றான். ஆரம்பத்தில் அவனும் தன் உணவுக்காக, உடைக்காக, உறைவிடத்துக்காக மட்டுமே சண்டை போடத்தொடங்கினான். பிற்பாடு நாகரிகம் வளர வளர அவன் தேவைகளும் பெருகிவிட, கூடுதலான வசதிகளுக்காகவும் தனிப் பெருமைகளுக்காகவும் போரிடுவது அவனது அடிப்படைக் குணமாகிவிட்டது. அதை மறைத்து , வெளியே தன்னை உத்தமனாகக் காட்டிக்கொள்வது அவன் இயல்பு ஆகிவிட்டது.

“நாகரிகம் வளரவளர ஒழுக்கமும் வளர வேண்டாமா? மனிதன் தனக்குத்தானே வகுத்துக்கொண்ட இத்தனை ஒழுக்கங்களும்,சட்டங்களும் ஏன் அவனை நெறிப்படுத்தவில்லை?

சட்டதிட்டங்களால் ஆளப்படுவதால் மட்டுமே எந்தச்சமூகமும் நாகரிகம் அடைந்துவிட்டதாகச் சொல்லிவிடமுடியாது. லண்டன், பாரிஸ், மும்பை,நியூயார்க் என இன்றைக்கு மிக நாகரிகமான நகரம் என்று நீங்கள் கருதும் எந்த நகரத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே சட்டங்களை விலக்கி, காவல்துறையை கலைத்து விட்டுப் பாருங்கள்...மூன்றே நாளில் எல்லாம் தலைகீழாகிவிடும். மிக நாகரிகமான மனிதனாகக் கருதப்பட்டவன்கூட குகைமனிதனை விட கேவலாமாக நடந்து கொள்வதை நீங்கள் பார்க்கலாம்.

சங்கரன்பிள்ளை ஒருநாள், தன் தோட்டக்காரன் திண்ணையில் உட்கார்ந்திருப்பதை பார்த்தார்.

“ஏய் ஏன் தோட்டச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றப்போகவில்லை?” என்றார் கோபமாக.

தோட்டக்காரன் அவரை சந்தேகத்தோடு பார்த்து “வெளியே மழை கொட்டிக்கொண்டிருக்கிறதே ஐயா!” என்றான்.

“அதனால் என்ன? குடையை எடுத்துக்கொண்டு போ!” என்று அவனை விரட்டினார் சங்கரன்பிள்ளை.

மனிதன் வகுத்த சட்டங்கள்

## உடல் என்பது மிருகம்!

இப்படித்தான்... சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாத சமயங்களில் அவை அர்த்தமற்றுப் போகின்றன.

காடுகளில் வாழ்க்கை கடினமாக இருக்கிறது. என்றுதான் மனிதன் நகரங்களை உருவாக்கினான். இப்போது நகரங்களில் வாழ்வது அதை விட மிகக்கடினமாகிவிட்டது.

அடுத்தவனைவிட தான் குறைவான நிலையில் இருந்தால் அதைக்கண்டு கூனிக்குறுகிப்போகிறான். எந்த நிலையில் வாழ்கிறானோ அதில் சிறிதளவு இழந்தால் கூட தாழ்வான நிலைக்கு வந்துவிட்டதாக எண்ணி நிம்மதியைத் தொலைக்கிறான். உயிரே போய்விட்டதுபோல துக்கப்படுகிறான்.

எப்போது மனிதன் தன்னைத் தன் உடலோடு அதிகளவு அடையாளப் படுத்திக்கொள்ள தொடங்கினானோ அப்போதே இந்தப் பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது.

உடல் என்பது மிருகம்தான். உடலின் அபார தேவைகளுக்காக நீங்கள் வேட்டையில் இறங்குகையில் அந்தப் போராட்டத்தில் உங்களுடைய பெரும்பாலான சக்தி விரயமாகிறது.

நாகரிகம், கல்வி இவை இரண்டும் உங்களின் மிருகக் குணங்களை பின்னிழுத்து வைத்து, உங்களைப் போலியாக வெளியுலகில் காட்டிக் கொள்ளத் தூண்டுகின்றன.

எப்போதெல்லாம் கற்றதும் நாகரிகமும் மறந்துபோகிறதோ அப்போதெல்லாம் அடக்கிவைத்த குணம் தன்னை முன்தள்ளி வெடித்து வெளிப்படுகிறது.

உங்களை உங்கள் உடலுடன் மட்டுமே அடையாளப்படுத்திப் பார்க்கும் தன்மையிலிருந்து விலகினால் மட்டுமே மிருகக் குணம் தன்னை வெளிப்படுத்திக்கொள்ள வழியின்றி அடங்கும்.

உடலைத்தாண்டி உள்ளத்தின் நிலையைப் பற்றி புரிந்துகொள்வதே உங்களை நேர்ப்படுத்தும், சீர்ப்படுத்தும். உண்மையான ஆன்மீகம் மட்டுமே உங்களுக்கு விஷம் விலக்கி நல்லமுதூட்டும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# கணினியில் தூரிகையாகும் கைவிரல்கள் 02



1972-73 களில் “உலகம் 2000 ஆம் ஆண்டு அழியப்போகின்றது; கர்த்தரின் கருணையுள்ளவர்கள் மட்டும் இரட்சிக்கப்படுவார்கள்” என்ற துண்டுப்பிரசுரங்கள் யாழ்ப்பாணம் முழுக்க உலாவந்து கொண்டிருந்தது.

அச்சமயம் எனக்கு 12-13 வயது. நான் மிகுந்த சினிமா பிரியனாக இருந்தேன். அந்த நேரத்தில் நான் இறந்து விடுவேன் என்ற பயத்தையும் கவலையையும் விடவும் 2000ஆம் ஆண்டிற்குப்பின் வரவிருக்கின்ற சினிமாப்படங்களை நான் பார்க்க முடியாமல் போகப்போகின்றதே என்ற கவலை இருந்து கொண்டே இருந்தது.

பின்பு கொஞ்சம் வயது அதிகமாகஅதிகமாக அந்த 2000 ஆம் ஆண்டு உலக அழிவில் கொஞ்சம் நம்பிக்கை இல்லாமல் போனாலும், 2000ஆம் ஆண்டு பிறக்கும் வேளையில் உலகமனைத்தும் ஒரு விடயத்துக்கு பயந்து கொண்டு இருந்தது. அது தான் கணினிப்பதிவுகள். 1,0 இந்த இரு எண்களின் ஆதிக்கத்தினால் இயங்கும் கணினி உலகம் 31-12-1999 ஆம்திகதி 23.59 இற்குப்பின் ஸ்தம்பிக்கப்போகிறது என்ற பயம் அனேக மட்டங்களில் இருந்து கொண்டிருந்தது. இதற்காக உலக நாடுகள் எல்லாவற்றிலும் எத்தனையோ வடிவில் பாதுகாப்பு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும் மனதினுள் ஒரு பயம்.

எங்கள் நகர சபையில் மணிக்கூட்டில் 1-1-2000 நடுநிசிதாண்டி ஒரு நிமிடம் ஆகும்பொழுது 00.01 மணிக்கு கணினியை இயக்கிப்பார்க்கும்குழுவில் நானும் ஒருவனாய் இருந்தேன். 31-12-1999, 23-59 மணிக்கு மனம் படபடக்கத் தொடங்கியது. 2000 ஆம் ஆண்டு உலகம் அழியப்போகிறது என்ற என் சின்ன வயதுப்பயம் எனக்குள் பூதாகரமாய் வந்து வெருட்டியது. மூன்றாம் வகுப்பிலேயே அம்மாவுடன் ஊர்முருக

> **“கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை”**

மூர்த்தி கோவிலில் தீட்சை பெற்றுப் பின் ஐயருக்குப்பின்னால் கோயில் தொண்டுகள் செய்து வளர்ந்த என் கண்முன்னே மானிப்பாய் அந்தோனியாரும் மடுமாதாவும் வந்தார்கள். கை தானாகவே நெஞ்சில் சிலுவை போட்டுக்கொண்டது. 1-1-2000, 00.00 தேவாலயத்திலும் நகர சபையிலும் மணிகள் அடிக்கத்தொடங்க வாணங்கள் தரையிலிருந்து பீறிட்டுக் கொண்டு வானத்தை நோக்கி சென்று மத்தாப்பு மழை பொழியத் தொடங்கியது.

கைகள் நடுங்க கணினியை அழுத்தினேன். HAPPY NEW YEAR என்று வாழ்த்தும் கணினியின் வலது கை மூலையில் 00.01 நேரம் காட்டிக் கொண்டிருந்தது. மனம் அப்பாடா என இருந்தது. எல்லோரும் அவரவர் துறையைச்சார்ந்த பகுதிகள் ஏதாவது பாதிக்கப்பட்டு இருக்கின்றதா என ஆராயத்தொடங்கினோம்.

இதனிடையே நான் எனது ‘நெற்பாங்கில்’ எனது கணக்கில் உள்ள காசு ஏதாவது கூடியிருக்கின்றதா அல்லது குறைந்திருக்கிறதா எனப் பார்த்துக் கொண்டேன். எதுவுமே நடந்திருக்கவில்லை.

மொத்தத்தில் 2000 ஆம் ஆண்டு இனிதே பிறந்தது.

இது ஒருபயம்- அல்லது அதீத கற்பனையில் எழும் ஒரு பயம் “மெல்லத் தமிழ் இனிச்சாகும்” என தமிழின் இனிமையைக்கூறும் கவி வரியை தற்காலத்தில் “மெல்லத் தமிழ் இனிச் சாகும்” என எம்மவர் பலரின் வாயால் கேட்கும்போது எம் தமிழ் செத்து விடுமா என எனக்குள் தோன்றி மறைந்து கொண்டிருந்தது.

எம் பிள்ளைகள் மேலைநாட்டில் இரண்டாம்தர சந்ததிகளாக வாழத் தலைப்பட்டபொழுது...

முதலாம் சந்ததிப்பெற்றோருக்கு ஆங்கில மோகம் அதிகரித்து ஆங்கிலம் தமிழை சாதிப்பிரதிட்சை செய்த பொழுது புலம் பெயர் நாடுகளில் தமிழர்கலாசாரம் தனியே கூறைச் சேலையிலும் கழுத்தில் தொங்கும் தாலியில் மட்டுமே தொங்கிக் கொண்டிருக்க மற்றவற்றை இலகுவாக தூக்கி எறிந்த பொழுது ஜேர்மனி மாமாவினதும் பிரான்ஸ் சித்தியினதும் பிள்ளைகள் ஊமைப் பாஷையால் கதைத்துக் கொண்டிருக்கும் பொழுதும் இந்த “மெல்லத்தமிழ் இனிச் சாகும்” என்ற கூற்று உண்மையாகப் போகின்றதோ என்ற பயம் என்னைப் பீடிக்கத் தொடங்கியது.



என்னதான் பிரச்சினை என்றாலும்

**வீ. ஜீவகுமாரன்**
**டென்மார்க்**

அங்கிருந்து செத்திருக்கலாம் எனத் தோன்றியது. இலங்கையை விட்டு வெளிக்கிட்ட பொழுது உயிர்ப் பாதுகாப்பும் பொருள் தேடலும்தான் கண்முன் இருந்ததே தவிர ஒரு புதிய கலாசாரச் சூழலில் இணைவாக்கம்(integration) என்ற பெயரில் எங்கள் இன அடையாளத்தை இழந்துவிடும் (assimilation) அபாயத்தை நோக்கிச் செல்லப் போகின்றோம் என யாரும் நினைக்கவில்லை.

(தொடரும்)

# பரிகாரம் எளிமையாக இருந்தாலும் பலன் உண்டு




செவ்வாய் திசை, செவ்வாய் புத்தியில் சூரிய நமஸ்காரம் செய்து வர தோல் சம்பந்தப்பட்ட வியாதி விலகுவதுடன் பூமி, மனை வாங்கும் யோகம் உண்டாகும்.

இராகு புத்தியில் மருத்யுஞ்ஜய ஜெபத்தை தொடர்ந்து செய்து வர பகை விலகும்.

குரு புத்தியில் சிவபூஜை செய்துவர நினைத்த காரியங்கள் ஜெயம் ஆகும்.

சனி புத்தியில் மருத்யுஞ்ஜய ஜெபம் செய்து வர சத்ருக்கள், மித்திரர்களாக மாறுவார்கள்.

புதன்புத்தியில் சூரிய நமஸ்காரம் செய்து வருவது உயர் பதவியைக் கொடுக்கும்.

கேது புத்தியில் ருத்ர ஜெபம் செய்ய உணவால் ஏற்படும் விஷ பீதி விலகும்.

சுக்ர புத்தியில் துர்க்கையை பூஜை செய்ய நினைத்த காரியம் ஜெயம் ஆகும்.

சூரிய புத்தியில் கோ தானம் செய்ய அரசாங்க அலுவல் அனுகூலமாகும்.

சந்திர புத்தியில் பார்வதி அல்லது கௌரி தேவியை பூஜிக்க புத்திர தோஷங்கள் விலகி மன சாந்தி உண்டாகும்.

**புதன் திசையில் சாந்தி பரிகாரம்**

புதன் திசை, புதன் புத்தியில் தொடர்ந்து துர்க்கையை பூஜித்து வர மனபேதங்கள் விலகும்.

புதன் திசை, கேது புத்தியில் மகிஷ் தானம் செய்ய அகலா மரணம். விஷ பயம் விலகும்.

சுக்ர புத்தியில் வெள்ளை நிறமான பசுவை தானம் செய்ய கடன், வழக்கு விலகி செல்வம் உண்டாகும்.

சூரிய புத்தியில் சூரிய நமஸ்காரம் செய்து வர அரசியல் வெற்றிகள் உண்டாகும்.

சந்திர புத்தியில் துர்க்காதேவியின் மந்திரத்தை ஜெபம் செய்ய, குடும்பக் கலகம், பெண்களால் ஏற்படும் மன வருத்தங்கள் போன்றவை விலகும்.

செவ்வாய் புத்தியில் முருகப் பெருமானை பூஜிக்க, பூமி சம்பந்தப்பட்ட தொல்லைகள், சகோதரர்களுக்குள் இருக்கும் கலகம் போன்றவை விலகும்.

இராகு புத்தியில் வில்வத்தால் சிவபெருமானின் ஆயிரம் நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்ய கெட்ட கனவுகள், செய்வினை போன்றவை விலகும்.

குரு புத்தியில் மிருத்யஞ்ஜெய மந்திரத்தைச் ஜெபம் செய்ய ஆயுள் அதிகரிக்கும்.

சனி புத்தியில் எருமை தானம் செய்ய கடுமையான வியாதி விலகுவதுடன் பகை மறையும்.

**சுக்ர திசையில் சாந்தி பரிகாரம்**

சுக்ர திசையில் பித்தளை அல்லது வெள்ளி செம்பில் மாவிலை, தேங்காய் வைத்து புண்ணிய நதியின் ஜலத்தைச் சேர்த்து வேதம் படித்தவருக்கு தானம் செய்ய பித்ரு சொத்துக்கள் தேடி வரும். செல்வம் பெருகும்.

சுக்ர திசை சூரிய புத்தியில் சூரிய நமஸ்காரம் செய்துவர நீண்ட நாள் வியாதி விலகும்.

சந்திர திசையில் செவ்வாய், வெள்ளி தோறும் கௌரியைப் பூஜிக்க மங்கலகரமான நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறும்.

செவ்வாய் புத்தியில் வாசனைப் பூக்களால் முருகப் பெருமானை அர்ச்சிக்க சகோதர கலகங்கள் விலகும்.

இராகு புத்தியில் சிவந்த மலர்களால் கௌரிதேவியைப் பூஜிக்க பில்லி சூனிய பெரும் பகை அகலும்,

குரு புத்தியில் சிவ நாம ஜெபமும் அர்ச்சனையும் செய்துவர மனதில் தெளிவு உண்டாகும்.

சனி புத்தியில் எருமை தானம் செய்ய விபத்து, மரண பயம் விலகும்.

கேது புத்தியில் ஏழைகளுக்கு ஆடு தானம் செய்ய வயிறு சம்பந்தப்பட்ட வியாதி மற்றும் விஷ பயம் விலகும்.

**கேது திசையில் சாந்தி பரிகாரம்**

கேது திசையில் கேது புத்தியில் கோயில் பூசாரிக்கு அல்லது வேதம் படித்துவருக்கு உபசாரம் செய்து அன்ன மளிக்க மனோபீதி விலகும்.

கேது திசை சுக்ர புத்தியில் கௌரி தேவி பூஜை தொடர்ந்து செய்துவர சுப காரிய தடை விலகும்.

சூரிய புத்தியில் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்து வர பித்ரு சொத்துக்கள் தானே தேடி வரும்.

சந்திர புத்தியில் மிருத்யஞ்ஜெய ஜெபம் செய்யதடைப்பட்ட பயணங்கள் கைகூடிவரும்.

செவ்வாய் புத்தியில் செப்பு அல்லது வெள்ளித் தகட்டில் கௌரி பிரதமை செய்து தானம் செய்ய பூமி சம்பந்தப்பட்ட தோஷங்கள் விலகும்.

இராகு புத்தியில் எருமை தானம் செய்ய சண்டை, சச்சரவுகள் விலகுவதுடன், குடும்ப ஒற்றுமை உண்டாகும்.

குரு புத்தியில் எள் தானம் செய்ய பித்ருக்கள் ஆசி கிடைக்கும்.

சனி புத்தியில் மிருத்யுஞ்ஜெய ஜெபம் செய்ய ஏவல் மற்றும் இரத்த சம்பந்தப்பட்ட வியாதிகள் விலகும்.

புதன் புத்தியில் வறியவர்களுக்கு ஆடு தானம் செய்ய நீண்டநாள்பகை விலகும்.

(முற்றும்)

# தலைமைத்துவ பயிற்சிக்கு 9 கோடி ரூபா நிதி செலவு

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கான கற்கை அனுமதியை பெற்றுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய அவர்,

பல்லைக்கழகங்களில் பகிடிவதை கலாசாரம் இனிமேல் ஏற்றுக் கொள்ள முடியாதது. இந்த திட்டத்திற்காக அரசாங்கம் 9 கோடி ரூபா நிதியினை செலவிட்டுள்ளதாகவும் இரண்டு கட்டங்களாக இடம்பெறும் இந்த விசேட பயிற்சி காரணமாக 10 ஆயிரம் மாணவர்கள் பயனடைவர் எனவும் இந்த பயிற்சி தொடர்பாக பெற்றோரும் மாணவர்களும் கொண்டுள்ள அச்சத்தை களைவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது உரையில் தெரிவிதுள்ளார்.

(ச-5)



புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மறைந்த கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பொ.செல்வரத்தினத்தின் ஞாபகார்த்தமாக கலைமதி மக்கள் மண்டபத்தில் குருதிக் கொடையாளிகள் இரத்ததானம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# யுத்தம் காரணமாக அழிவடைந்து உள்ள ஆலயங்களை புனரமைத்து தரவேண்டும்

## இந்து, பௌத்த கலாசார பேரவையிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கில் பல ஆலயங்கள் அழிவடைந்து மக்கள் வழிபாடு செய்ய முடியாத நிலையில் உள்ளது. அவற்றை புனரமைத்துத் தர வேண்டும் என இந்து, பௌத்த கலாசார பேரவையிடம் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இந்து,பௌத்த கலாசார பேரவை நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு பௌத்த மதத்தை சார்ந்தவர்கள் உதவ வேண்டும். யுத்தத்தால் எமது பகுதியில் பல இந்து ஆலயங்கள் அழிவடைந்துள்ளன.

அவற்றை புனரமைக்கும் பணி ஓரளவுக்கு இடம்பெற்று வந்தாலும் அது விரைவு படுத்தப்பட வேண்டும்.

இங்கு வந்துள்ள தேரர் அவர்களை நாம் முழுமையாக நம்புகிறோம். அவர் இதற்கு உதவிபுரிவார். அவர் சமயத் தலைவர் என்ற ரீதியிலேயே இந்தக் கோரிக்கையை நான் விடுக்கின்றேன். எனக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை. இந்து மதத்தை சார்ந்தவன் என்றாலும் எல்லா மதத்தையும் நேசிப்பவன் என்ற ரீதியிலேயே இந்தக் கோரிக்கையை விடுக்கின்றேன்.

இந்து மதமும் பௌத்த மதமும் பல ஒற்றுமைத் தன்மையைக் கொண்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# தெற்காசிய நாடுகளுள் சுகாதார துறையில் இலங்கை முன்னிலை

(கொழும்பு)

சுகாதார துறையில் தெற்காசிய வலயத்திலுள்ள 11 நாடுகளுக்குள் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கைக்கு அமைய இலங்கை இந்த இடத்தினைப் பெற்றுள்ளது.

5 வயதிற்குட்பட்ட சிசுக்களின் குறைந்தளவிலான மரண வீதம், குறைந்தளவிலான தாய் மரண வீதம், தடுப்பூசிகள் வழங்கப்படுதல் மற்றும் பயிற்சி பெற்ற சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றை கருத்திற் கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் தாய் மரண வீதம் மிகவும் குறைவாக காணப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிறக்கும் 10 ஆயிரம் சிசுக்களில் 58 சிசுக்கள் மரணமடைவதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்த நிலைமை மலேஷியாவில் 120 ஆகவும் நேபாளத்தில் 830 ஆகவும் காணப்படுவதாக சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டுகின்றது. (ஸ்ரீ-2)

23) ஏனைய மூவரிடமும் தலா ஒவ்வொரு மாபிள் வாங்கிய B யிடமுள்ள மாபிள்களுக்கும் C யிடம் தற்போதுள்ள மாபிள்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
1) இரண்டு 2) மூன்று 3) நான்கு

ஈட்டி எறிதல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் மூவரும் ஈட்டியினை வீசிய தூரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாணவர்கள் | வீசிய தூரம் | பெற்ற இடம் |
|---|---|---|
| ஹசீம் | 48.3 மீற்றர் | ................ |
| ரஹீம் | 52.5 மீற்றர் | ................ |
| ஹசன் | 52.7 மீற்றர் | ................ |

24) மூவரில் முதலிடம் பெற்றவர் யார்?
1) ஹசீம் 2) ரஹீம் 3) ஹசன்

25) ஹசீம் முதலாமிடம் பெறவேண்டுமாயின் குறைந்தது இன்னும் எவ்வளவு அதிகமாக எறிந்திருக்க வேண்டும்?
1) 4.6மீற்றர் 2) 4.5மீற்றர் 3) 4.4மீற்றர்

26) **பயணம்** தொடர்பான பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
1) விமானங்கள் எல்லாம் ஆகாயத்திலேயே பயணிக்கும்
2) புகையிரதம் வீதியால் வளைந்து வளைந்து செல்லும்
3) கப்பல்கள் எப்போதும் வீதியில் பயணிக்காது

27) **விளையாட்டு** தொடர்பான மிகச்சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1) விளையாட்டில் தோல்வியடையக்கூடாது.
2) வெற்றியும் தோல்வியும் சமமாக மதிக்கப்படவேண்டும்
3) வெற்றியே விளையாட்டின் நோக்கம் ஆகும்.

28) **"துன்பத்தில் நொந்துபோய் இருந்தவனுக்கு மேலும்மேலும் துன்பம் வருதல்"** எனும் கருத்தைத்தரும் தொடரைத் தெரிவுசெய்க.
1) பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது
2) அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்
3) மரத்தால் விழ்ந்தவனை மாடேறி மிதித்தது போல

சிறியவர்கள் எப்போதும் விளையாட்டுக் குணமுடையவர்களாக இருப்பார்கள், ஆனால் பெரியவர்கள் எப்போதும் கண்டிப்பானவர் களாகவே இருப்பார்கள்

29) மேலுள்ள கூற்றுக்குப் பொருந்தும் விடையினை தெரிவு செய்க.
1) பெரியவர்களால் விளையாடமுடியாது
2) சிறியவர்களுக்கு விளையாட மட்டுமே தெரியும்
3) சிறியவர்களைக் கண்டிப்பது பெரியவர்களின் கடமை

ஒரு புத்தகத்தின் ஏழாவது பக்கம் ஒற்றை எண்ணாகும். அதன் பத்தாவது பக்கம் இரட்டை எண்ணாகும்.

30) இவ்விரண்டு பக்கங்களுக்கும் இடையில் உள்ள இரண்டு பக்கங்கள் தொடர்பான சரியான கூற்று எது?
1) இரண்டும் ஒற்றை எண்கள் ஆகும்
2) இரண்டும் இரண்டை எண்கள் ஆகும்
3) ஒற்றையெண் ஒன்றும் இரண்டையெண் ஒன்றும் ஆகும்.

31) அப்புத்தகத்தின் இறுதிப்பக்க எண் 30 எனின், புத்தகத்தின் நடுப்பக்க எண்கள் இரண்டும் எவையாக இருக்கும்?
1) 15உம் 16உம் 2) 14உம் 15உம் 3) 16உம் 17உம்


ஒரு காட்டில் ஒரு .....#..... ராஜாவாக இருந்தது. அக்காட்டில் .....✪..... ஒன்றும் .....⌘..... ஒன்றும் வசித்து வந்தன. ஒரு நாள் ராஜாவாகிய .....#..... இடம் அன்றைய உணவிற்காக வர வேண்டிய .....✪..... வராத காரணத்தால் .....#..... கடும் கோபமடைந்தது.


**மேலுள்ள கதைப்பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

32) இக்கதையின் படி # இக்குறியீடு இடம் பெற்றுள்ள இடங்களில் வரவேண்டிய மிருகம் எது?
1) புலி 2) யானை 3) சிங்கம்


33) இக்கதையின் படி ✪ ⌘ இக்குறியீடுகள் முறையே இடம்பெற வேண்டிய பிராணிகள் எவை?
1) முயல், நரி 2) நரி, முயல் 3) சிங்கம், முயல்

**34 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.**





34)  எனும் குறியீடுகளை சொற்களாக எழுதுக.


.............................................................

35)  இந்த நான்கு குறியீடுகளையும் பயன்படுத்திக் கருத்துள்ள ஒரு சொல் எழுதுக.

.............................................................

36) 


அருகேயுள்ள சதுரக்கூட்டை மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வலமாகவும் கூட்டும்போது கூட்டுத்தொகை 40 வருமாறு கூடுகளை பூரணப்படுத்துக.

37) 

அருகேயுள்ள வட்டத்தில் ஏதோ ஒரு ஒழுங்கில் எண்கள் இடப்பட்டுள்ளன. எண் இடம்பெறாமல் உள்ள பகுதியினுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

.............................................................

**ஒரு பேருந்து A நகரத்தில் இருந்து B என்னும் நகரத்தை அடைவதற்குள் ஆறு தரிப்பிடங்களில் மட்டும் நின்று போனது. அத்தரிப்பிடங்களில் இறங்கிய பயணிகள் விபரத்தையும் ஏறிய பயணிகள் விபரத்தையும் கீழ் வரும் உரு காட்டுகிறது.**




38) மூன்றாவது தரிப்பிடத்திலிருந்து பேருந்து புறப்படும் போது பேருந்தில் எத்தனை பயணிகள் இருந்தனர்?

.............................................................

39) பேருந்து நகரம் B யை அடையும் போது பேருந்தினுள் எத்தனை பயணிகள் இருந்தனர்?

.............................................................


40) பேருந்து நகரம் A யிலிருந்து B யை சென்றடைவதற்குள் தரிப்பிடங்களில் ஏறிய பயணிகளா? இறங்கிய பயணிகளா? அதிகம்.

.............................................................

(பகுதி II வெள்ளிக்கிழமை வெளிவரும்)


# மாதிரி வினாத்தாள் - 04இற்குரிய விடைகள்

## பகுதி - I

1) 3
2) 2
3) 4
4) 3
5) 3
6) 1
7) 1
8) 2
9) 2
10) 1
11) 3
12, 1
13) 2
14) 2
15) 1
16) 1
17) 2
18) 2
19) 2
20) 3
21) 2
22) 3
23) 2
24) 2
25) 3
26) 2
27) 1
28) 1
29) 

30) 24 கம்பங்கள்
31) $9cm^2$
32) 7cm
33) 1991ம் ஆண்டு
34) 2 மணித்தியாலம் 30நிமிடம்
35) 5 மணித்தியாலம்
36) 4400kg 400g
37) 14
38) 20
39) 6 தடவைகள்
40) விமல்

## பகுதி - II

1) பருகுகின்றன, குடிக்கின்றன 2) மங்கல், இருள்
3) பனித்துளிகள் 4) அலறும்
5) பூ மலர்ந்து மணம் பரப்புகின்றது 6) கேட்கிறோம்
7) இயற்கையின் கொடைகள்
8) (i) அழகிய, ரீங்காரம் செய்யும் (ii) விரும்பி
9) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
10) ஆழமறியாமல் காலை விடாதே
11) (i) வெளிச்சம் (ii) அறிவிப்பு (iii) தொழில் (iv) மண்ணரிப்பு
12) ? குறி 13) குருதட்சணை
14) உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது.
15) நான் வீட்டிற்குப் போய் வருகிறேன்
16) Hammer 17) Rainbow
18) தயவுசெய்து கதவை மூடவும்
19) Where are you going?
20) (i) அஸ்ச (ii) நாசய (iii) கட்ட
21) நல்ல நாளாகட்டும்
22) 4 23) 1 24) 3 25) 4 26) 1 27) 3
28) 2 29) 1 30) 3 31) 4 32) 3 33) 2
34) 3 35) 3 36) 3 37) 2 38) 4 39) 2
40) 2 41) பராக்கிரமபாகு
42) காலிக்கோட்டை 43) கரப்பந்து (வொலிபோல்) 44) வலைப்பந்து
45) (+, -) முனைகள் சரியாக இருப்பின் புள்ளி வழங்குக
46) (i) புதன் (ii) 225 (iii) 150 (iv) 115
(v) சரியாக நிழற்றப்பட்டிருப்பின் 4 புள்ளிகள்
47) 8m 48) 17m 49) 7 மணி 23 நிமிடம்
50) 
51) 15 தடவைகள் 52) $^4/_8$ அல்லது $^1/_2$ 53) 0.8
54) 41 மின்கம்பங்கள் 55) $7\,^8/_{10}$ 56) 20 பெட்டிகள்
57) ரூ. 67.50 58) (i) 16cm (ii) $8cm^2$

59 - 64 வரையான கட்டுரை வினாவுக்கு சரியான ஒவ்வொரு வாக்கியத்திற்கும் இரண்டு புள்ளிகள். ஒரு வாக்கியத்தில் ஒரு எழுத்துப்பிழை இருப்பின் ஒரு புள்ளி குறைக்கவும். ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப்பிழைகள் இருப்பின் புள்ளிகள் வழங்க வேண்டாம்.

# ஏமன் ஜனாதிபதி பிடிவாதம் அமெரிக்கா கடும் எரிச்சல்



ஏமன் ஜனாதிபதி அல் அப்துல்லா சலே பதவி விலக மறுத்து விட்டார். இதையடுத்து வளைகுடா கூட்டுறவு கவுன்சில் (ஜி.சி.சி) ஏமன் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் தனது பணிகளை நிறுத்தி விட்டது. ஏமன் ஜனாதிபதியின் இந்த பிடிவாதப் போக்கினால் அமெரிக்கா கடும் எரிச்சல் அடைந்துள்ளது.

ஏமனில் அந்நாட்டு ஜனாதிபதி சலே பதவி விலகக்கோரி கடந்த நான்கு மாதங்களாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் அல்கொய்தா வளர்வதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைத்து விடுமோ என்ற பீதியில் சவுதி அரேபியாவும் அமெரிக்காவும் சலே பதவி விலகும் படி வலியுறுத்தி வருகின்றன. வளைகுடா கூட்டுறவு குழு (ஜி.சி.சி ) இப்பிரச்சினையில் தலையிட்டு சில பரிந்துரைகளை முன்வைத்து அதில் பதவி விலகிய பின் சலே மற்றும் அவரது கூட்டாளிகள் மீது எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இருமுறை ஏமாற்றிய சலே

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய சலே கையெழுத்திடுவதாகக்கூறி இருமுறை அதிலிருந்து பின்வாங்கினார். எனினும் ஜி.சி.சி. தொடர்ந்து அவரிடம் பேச்சு நடத்தி வந்தது. இறுதியில் கடந்த வார மத்தியில் அவர் கையெழுத்திட ஒப்புக்கொண்டார். அதையடுத்து கடந்த 21 ஆம் திகதி அமெரிக்கா ஜி.சி.சி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதர்கள் முன்னிலையில் எதிர்க்கட்சிகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. ஆளும் கட்சி உறுப்பினர்களும் கையெழுத்திட்டனர்.

### புது நிபந்தனை

கடந்த 22 ஆம் திகதி சலே கையெழுத்திடுவதாகக்கூறினார். ஆனால் அவர் திடீரென புது நிபந்தனை ஒன்றை விதித்தார். தனது மாளிகைக்கு எதிர்க்கட்சிகள் வந்து தனது முன்னிலையில் கையெழுத்திட வேண்டும் என்றார்.

ஏற்கனவே பல்வேறு நாட்டு தூதர்கள் முன்னிலையில் கையெழுத்திட்டு விட்டதாலும் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றால் அவர் மீது கடும் கோபத்தில் உள்ள மக்களின் ஆவேசத்துக்கு ஆளாக நேரிடும் என்பதாலும் எதிர்க்கட்சியினர் ஜனாதிபதியின் கோரிக்கையை நிராகரித்தனர். இதையடுத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜனாதிபதி சலே மறுத்துவிட்டார்.

தொடர்ந்து ஏமன் அரசியல் நெருக்கடிக்கான தீர்வு காணும் தனது முயற்சி அனைத்தையும் ஜி.சி.சி நிறுத்திவிட்டது. அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிங்டன் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் "சலே தவிர அனைவரும் கையெழுத்திட்டு விட்டனர். மீண்டும் மீண்டும் அவர் மறுத்து வருவதால் அமெரிக்கா கடும் எரிச்சல் அடைந்துள்ளது. சொன்ன வார்த்தைப்படி உடனே அவர் கையெழுத்திட வேண்டும். ஐக்கிய அரபு நாடுகளின் தூதரகம் முற்றுகையிடப்பட்டது கண்டனத்திற்குரியது" என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி சலே நேற்று முன் தினம் விடுத்த அறிக்கையில், "இந்த ஒப்பந்த முயற்சி தோல்வி அடைந்ததற்கு எதிர்க்கட்சிகள் தான் காரணம். ஏமனில் உள்நாட்டுப் போர் உருவாகி இரத்தம் சிந்தினால் அவர்கள் தான் அதற்குப் பொறுப்பு" என்று கூறியுள்ளார்.

### சாகசம் காட்டும் சலே

ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதாகக் கூறிய சலே, ஏற்கனவே இருமுறை கையெழுத்திடுவதாகக் கூறி ஏமாற்றினார்.

நேற்று முன்தினம் அளித்த பேட்டி யில் அவர் "நான் பதவி விலகினால் அல்கொய்தா ஏமனைக் கைப்பற்றி விடும். அதன் பின் யாராலும் ஏமனைக் காப்பாற்ற முடியாது" என்று முதலைக் கண்ணீர் வடித்தார்.

அதோடு "என் மாளிகைக்கு எதிர்க்கட்சிகள் வந்து என் முன்னிலையில் கையெழுத்திட்டால்தான் நான் நம்புவேன்" என்றார்.

"இதெல்லாம் பதவியைத் தக்க வைக்க சலே போடும் சாகச நாடகம். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தால் மக்கள் பலியானதற்குப் பொறுப்பேற்காமல் தப்பித்து கௌரவமாக விலகியிருக்கலாம். ஆனால், தற்போது உலகளவிலான நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. அவரது நாட்கள் எண்ணப்படுகின்றன" என அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

### ஜி.சி.சி.யின் நிபந்தனைகள்

ஒப்பந்தத்தில் சலே கையெழுத்திட்டு 30 நாட்களில் தனது பதவியை துணை ஜனாதிபதியிடம் ஒப்படைக்க வேண்டும்.

இதையடுத்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் இணைந்த தற்காலிக அரசு பதவியேற்கும். ஜனாதிபதி பதவி விலகி 60 நாட்களில் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

ஜனாதிபதி அவரது குடும்பத்தார் மற்றும் அவரது கூட்டாளிகள் அனைவருக்கும் அனைத்து விசாரணைகளிலிருந்தும் சட்டரீதியான பாதுகாப்பு அளிக்கப்படும். (ஸ்ரீ-2)




# எகிப்தில் பொது மக்களை சுட்டுக்கொன்ற பொலிஸ் அதிகாரிக்கு மரண தண்டனை

எகிப்தில் போராட்டத்தின் போது பொதுமக்களை சுட்டுக்கொன்ற பொலிஸ் அதிகாரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. எகிப்தில் பொதுமக்கள் போராட்டம் நடத்தியதை தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் இருந்து முபாரக் விலகினார். அவரும் அவரது 2 மகன்களும் கைது செய்யப்பட்டனர்.

போராட்டத்தின் போது பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் சுமார் 800 பேர் கொல்லப்பட்டனர். தற்போது அங்கு இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. போராட்டத்தின் போது ஆயுதமின்றி நிராயுதபாணியாக நின்ற பொதுமக்களை சுட்டுக்கொன்ற பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் மீது இராணுவ ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.


இந்நிலையில், போராட்டத்தின் போது பொது மக்களை சுட்டு கொன்ற பொலிஸ் அதிகாரி மொகமத் இப்ராகிம் ஆப்டெல் மோனம் என்பவருக்கு இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது. இவர் சுட்டதில் 23 பேர் கொல்லப்பட்டனர். 15 பேர் காயம் அடைந்துள்ளனர். அதற்காகத்தான் அவருக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையின் போது இவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகவில்லை. அவர் கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது நேரில் ஆஜரானாலோ இந்தத் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம். அப்போது இந்த வழக்கு விசாரணை மீண்டும் நடத்தப்படும் என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் இலஞ்ச ஊழல் மற்றும் பொதுமக்களை சுட்டுக்கொல்ல உத்தரவிட்டதற்காக முன்னாள் மந்திரி ஹபீப் எல்-அட்லிக்கு 12 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கென இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்டுள்ள அதிநவீன வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த குண்டு துளைக்காத கார் பீஸ்ட் என அழைக்கப்படுகிறது. இதன் விலை 3 இலட்சம் அமெரிக்கன் டொலராகும். ரொக்கெட் வீச்சு, கையெறி குண்டு என எத்தகைய குண்டு தாக்குதல்களையும் எதிர்க்கும் திறன் கொண்டது. சாட்டிலைட்போன், வயர்லஸ் இன்டர்நெட் என சகல வசதிகளை உள்ளடக்கியுள்ளது.

# சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் மீது ஐரோப்பிய யூனியன் தடை விதிப்பு

## அவரது சொத்துக்கள் அனைத்தும் முடக்கம்



(டமாஸ்கஸ்)

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் மீது, ஐரோப்பிய யூனியன் பல்வேறு தடைகளை விதித்துள்ளது. இதன் மூலம் மக்கள் போராட்டத்தின் மீது அவரது அரசு மேற்கொள்ளும் வன்முறை நடவடிக்கைகள் குறையும் என்று ஐரோப்பிய யூனியன் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் அசாத் பதவி விலகக் கோரி, கடந்த இரு மாதங்களாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மீது பீரங்கி மற்றும் இராணுவ வீரர்கள் மூலம் துப்பாக்கிச் சூடு நடத்துதல் உள்ளிட்ட வன்முறை நடவடிக்கைகளை ஜனாதிபதி அசாத் மேற்கொண்டு வருகிறார். அந்நாட்டு மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி இதுவரைக்கும் 800க்கும் மேலானோர் இப்போராட்ட காலகட்டத்தில் பலியாகியுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

கடந்த வாரம் மத்திய கிழக்கு தொடர்பான அமெரிக்க கொள்கையை வெளியிட்டுப் பேசிய ஜனாதிபதி பராக் ஒபாமா அசாத் ஜனநாயக ஆட்சியை சிரியாவில் ஆரம்பிக்கவைக்க வேண்டும். அல்லது பதவியை விட்டு உடனடியாக விலகிவிட வேண்டும் என்று கடுமையாக எச்சரித்திருந்தார். எனினும் அசாத்தின் இராணுவ ஒடுக்குமுறைகள் தொடரவே, அமெரிக்கா அவர் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது.

அதற்கு முன்பே, அசாத்தின் சகோதரர் உள்ளிட்ட சிலர் மீது மட்டும் ஐரோப்பிய யூனியன் பொருளாதாரத் தடைகளை விதித்தது. அதோடு ஆயுதப் பரிமாற்றத் தடையும் விதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்சில் கூடிய ஐரோப்பிய யூனியன் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில், அசாத் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்க ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி அவரது சொத்துக்கள் முடக்கப்படவுள்ளதுடன் பயணத்துக்கும் தடை விதிக்கப்படவுள்ளது . (ஸ்ரீ-2)

# அமெரிக்காவில் பயங்கர சூறாவளிக்கு 89 பேர் பலி

(ஜாப்ளின்)



அமெரிக்காவின் மிசவுரி மாகாணத்தில் நேற்று முன்தினம் வீசிய பயங்கர சூறாவளியில் சிக்கி, 89 பேர் உயிரிழந்தனர்.

இச்சூறாவளியால் அம்மாகாணத்தில் ஜாப்ளின் நகர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மிசவுரி மாகாணத்தில் நேற்று முன்தினம் அதிவேகபயங்கர சூறாவளி வீசியது. இதில் ஜாப்ளின் நகரில் தென்பகுதியில் உள்ள வீடுகள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் தரைமட்டமாயின. நகரின் முக்கிய வீதி 10 கி.மீ தூரத்துக்கு துண்டிக்கப்பட்டது. பல இடங்களில் மின்சாரம் மற்றும் எரிவாயு இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன. சூறாவளியில் சிக்கி 89 பேர் பலியானதாக ஜாப்ளின் நகர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

100 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். மிசவுரி மட்டுமல்லாமல், அதன் அருகில் உள்ள மூன்று மாகாணங்களும் பாதிக்கப்பட்டன. (ஸ்ரீ-2)

# தி.மு.க. அமைச்சர்கள் இராஜினாமா செய்யவுள்ளதாக கருணாநிதி அறிவித்தமை வெறும் கண்துடைப்பு நாடகம்

## தயாநிதிமாறன் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல்

(சென்னை)

வன்னியில் இடம்பெற்ற போரை நிறுத்தக் கோரி தி.மு.க்வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்யப் போவதாக அப்போது முதலமைச்சராகவிருந்த கருணாநிதி அறிவித்தமை, மக்களை திசை திருப்புவதற்காகப் போட்ட நாடகம் என மத்திய ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத்தளத்திடமிருந்து தி ஹிந்து நாளிதழ் பெற்ற தகவல் குறிப்புகளை அந்நாளிதழ் செய்தியாக வெளியிட்டுள்ளது.

தமிழக மக்களை பல்வேறு பிரச்சினைகளிலிருந்து திசை திருப்புவதற்காக அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி பல்வேறு நாடகங்களை அரங்கேற்றியதாக அமெரிக்க தூதரக அதிகாரிகளிடம் தயாநிதி மாறன் குறிப்பிட்டதாக இத்தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தி ஹிந்து நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு,

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்க வெளிவிவகார அமைச்சுக்கு அமெரிக்க துணைத்தூதுவர் அன்ட்ரூ சிம் அனுப்பிய தகவல் குறிப்பில் தயாநிதி மாறன் காங்கிரஸ் கட்சியின் பீற்றர் அல்போன்ஸ் ஆகியோருடன் அமெரிக்க அதிகாரிகள் பேசிய விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற போரை நிறுத்தக் கோரி தி.மு.க.வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்யப் போவதாக அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி அறிவித்தமை ஒரு நாடகம் என தயாநிதி மாறன் அப்போது கூறியுள்ளார்.

மின்வெட்டுப் பிரச்சினை, அதனால் ஏற்பட்டுள்ள மக்களின் கடும்கோபம் ஆகியவற்றிலிருந்து மக்களைத் திசைதிருப்புவதற்காகவே கருணாநிதி இவ்வாறு அறிவித்தார் எனவும் காங்கிரஸ் கட்சியின் செயலுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்பதாகக் காட்டிக் கொள்ளும் நாடகமே இதுவென்றும் தானும் இதில் பங்கேற்று இராஜினாமா கடிதம் கொடுத்ததாகவும் தயாநிதி மாறன் கூறியுள்ளார். இலங்கை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைவிட தமிழக மக்களை பல்வேறு பிரச்சினைகளிலிருந்து திசை திருப்பும் நோக்கமே கருணாநிதியிடம் இருந்தது.

அத்துடன் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதற்குப் பழிவாங்கும் முகமாக பிரபாகரன் கொல்லப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ராகுல் காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியின் மேலிடத் தலைவர்கள் உறுதியாகவுள்ளதாகவும் தயாநிதி மாறன் கூறியிருந்தார்.

அதேபோன்று, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலிருந்து தனது அமைச்சர்களை கருணாநிதி மீளப் பெறமாட்டார் என பீற்றர் அல்போன்ஸும் உறுதியாகக் கூறியிருந்தார். தனது அரசியல் எதிரிகளுக்கு எதிராகத் தான் வலுவாக இருப்பதாகக் காட்டிக் கொள்ளவே கருணாநிதி இவ்வாறு அறிவித்தார்.

ஆனால் தாங்கள் இராஜினாமாச் செய்யப்போவதாக தி.மு.க. அறிவித்தமை காங்கிரஸ் கட்சியின் மேலிடத்தை கடும் எரிச்சலுக்கு உள்ளாக்கியது உண்மை என பீற்றர் அல்போன்ஸ் கூறியுள்ளார்.

இவ்விருவரின் கூற்றுக்களையும் வைத்து நோக்கும்போது இரு கட்சிகளுமே ஒரு சுயநலத்தோடுதான் கூட்டணி அமைத்துள்ளதாகத் தெரியவருகிறது. முதலமைச்சர் பதவியில் நீடிக்க காங்கிரஸ் கட்சியின் ஆதரவு கருணாநிதிக்குத் தேவை. அதேபோன்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நீடிக்க கருணாநிதியின் ஆதரவு காங்கிரஸ் கட்சிக்கும் தேவை என இந்த தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## கனிமொழியின் பிணை மனு மீதான விசாரணை ஒத்தி வைப்பு

(புதுடில்லி)

2ஜி வழக்கில் சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றால் பிணை மறுக்கப்பட்டு டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கலைஞர் டி.வி பங்குதாரர் கனிமொழி டில்லி உயர்நீதிமன்றில் பிணை கோரி மனுத் தாக்கல் செய்துள்ளார். அவரது பிணை மனு மீதான விசாரணையை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து டில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதனால் அவர் மேலும் ஒரு வாரம் சிறையிலிருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. (ஸ்ரீ)

## கனிமொழிக்கு கருணாநிதி ஆறுதல்; திகார் சிறையில் சந்தித்தார்

(புதுடில்லி)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு முறைகேடு குறித்த வழக்கு விசாரணையில் டில்லி திகார் சிறையில் உள்ள தனது மகள் கனிமொழியை தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் மாலையில் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது.

டில்லிக்கு நேற்று முன்தினம் காலையில் சென்ற கருணாநிதி தனியார் ஹோட்டலில் தங்கினார். மாலை 5.30 மணியளவில் அவர் திகார் சிறைக்கு வந்தார். மகள் கனிமொழியைக் காண்பதற்காக ஏற்கனவே டில்லி வந்துள்ள ராஜாத்தியும் கருணாநிதியுடன் சிறைக்கு வந்தார். தி.மு.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவர் டி.ஆர்.பாலு, கனிமொழியின் கணவர் அரவிந்தன், கனிமொழியின் மகன் ஆதித்யா ஆகியோரும் உடன் வந்தனர்.

கருணாநிதியின்வயதைக்கருத்தில்கொண்டு அவரைச் சிறைக்குள் அனுமதிக்கும்படி தி.மு.க. தரப்பில் சிறைத்துறையினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதை ஏற்று அவரது கார் ஆறாம் எண்ணுள்ள சிறை வரை செல்ல அனுமதிக்கப்பட்டது.

பின்னர் சிறைத்துறை கண்காணிப்பாளர் அறையில் கனிமொழியும் கருணாநிதியும் சந்திக்க அனுமதிக்க வழங்கப்பட்டது. மகளும் தந்தையும் சிறிது நேரம் கண்கலங்கி உணர்ச்சி வசப்பட்டதாக தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன. குடும்பத்தினரின் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேல் நீடித்ததாக சிறைத் துறை கண்காணிப்பாளர் நீரஜ்குமார் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, கலைஞர் டி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமார் ஆகியோரையும் கருணாநிதி சந்தித்துப் பேசினார்.

பொதுவாக கருணாநிதி டில்லிக்கு வரும்போதெல்லாம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவரான சோனியா காந்தியைச் சந்திப்பது வழக்கம். ஆனால், இந்த முறை சந்திக்கவில்லை.

இந்நிலையில் மாலையில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கருணாநிதியைச் சந்தித்தார். (ஸ்ரீ-2)




## மரியம்பிச்சையின் மரணத்தில் மர்மம் இருக்கிறது

### தமிழக முதல்வர் ஜெயலலிதா பரபரப்புப் பேட்டி

(திருச்சி)

மரியம்பிச்சையின் விபத்துச் சம்பவத்தில் மர்மம் இருக்கிறது என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் திருச்சி மேற்கு தொகுதியில் தி.மு.க. அமைச்சர் நேருவை எதிர்த்து போட்டியிட்டு வெற்றி பெற்ற அ.தி.மு.க.வின் மரியம்பிச்சை சுற்றுச் சூழல் அமைச்சராக நியமிக்கப்பட்டார். கடந்த 22 ஆம் திகதி சென்னையிலிருந்து திருச்சி வந்த அவர் நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு பெரும்பிடுகு முத்தரையரின் சதய விழாவை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்தார்.

விழாவுக்குப் பின் அங்கிருந்தே சென்னையில் நடந்த எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக அமைச்சர்கள் மரியம்பிச்சையும் சிவபதியும் தனித்தனி காரில் புறப்பட்டனர்.

அமைச்சர் மரியம்பிச்சையின் கார் பாடலூர் அருகே சென்று கொண்டிருந்த போது முன்னால் சென்ற கன்டெய்னர் லொறி மீது மோதியது. இதில் காரின் ஒருபக்க முன்பகுதி நொறுங்கியது. சாரதி அருகில் உட்கார்ந்திருந்த அமைச்சர் மரியம்பிச்சை சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அமைச்சர் மரியம் பிச்சையின் மரண செய்தி கேள்விப்பட்ட முதல்வர் ஜெயலலிதா தனி விமானத்தில் மதியம் 2.30 மணிக்கு திருச்சி வந்தார். விமான நிலையத்தில் இருந்து நேராக மரியம்பிச்சை வீட்டுக்குச் சென்ற முதல்வர் ஜெயலலிதா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அப்போது அங்கிருந்த மரியம்பிச்சை



மனைவி பாத்திமா கனி, மகன் ஆசிக் மீரான் உள்ளிட்ட குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் நிருபர்களிடம் ஜெயலலிதா கூறியதாவது, மரியம்பிச்சை இழப்பு கட்சிக்கும் அவரது குடும்பத்துக்கும் பேரிழப்பு. மூன்று முறை மாநகராட்சி கவுன்சிலராக இருந்து படிப்படியாக அரசியலில் உயர்ந்தவர். நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் இப்படி அகால மரணம் அடைவார் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. பொது மக்கள் கட்சியினர் அவரது குடும்பத்தாரிடம் விசாரித்ததில் மரியம்பிச்சையின் மரணத்தில் மர்மம் இருக்கிறது. அதுகுறித்து விசாரிக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த வழக்கு சி.பி. சி.ஐ.டி பொலிஸாரின் விசாரணைக்கு மாற்றப்படும். குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்று முதல்வர் ஜெயலலிதா கூறினார். (ஸ்ரீ-2)


## அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு சோனியா முயற்சிக்கிறார்

### வைகோ தெரிவிப்பு

அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைக்கவே தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு சோனியா வாழ்த்துத் தெரிவித்துள்ளார் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க.வின் 18ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெம்பக்கோட்டை யூனியன் ஆலங்குளத்தில் வைகோ பேசியதாவது,

முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் என்ற முறையில் மன்மோகன் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார். சோனியாவோ தனது கட்சியைச் சேர்ந்த 58 வேட்பாளர்களையும் கூட்டணி கட்சியினரையும் தேர்தலில் தோற்கடித்து வெற்றி பெற்ற ஜெயலலிதாவுக்கு எதற்காக வாழ்த்துச் சொல்கிறார். அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதற்காகவே சோனியா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் புலிகளை அழிக்க கருணாநிதியின் ஆதரவு சோனியாவுக்கு தேவைப்பட்டதால் கூட்டணி வைத்தார். இப்போது அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்க நினைக்கிறார்.

தேர்தலில் தோற்று மகள் கனிமொழியும் சிறையிலிருக்கும் இக்கட்டான நிலையில் நிராயுதபாணியாக இருக்கும் கருணாநிதி பற்றி பேச நான் விரும்பவில்லை.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் இறக்கவில்லை உயிருடன்தான் இருக்கிறார். மீண்டும் வந்து போரிடுவார், வெல்வார், ஈழம் நிச்சயம் மலரும். இவ்வாறு அவர் பேசினார். (ஸ்ரீ-4)



புதிய சட்டமன்றத்தின் முதல் கூட்டத் தொடருக்கு எம்.எல்.ஏக்கள் புடைசூழ வந்த எதிர்க்கட்சி தலைவர் விஜயகாந்த்.

நல்லகாரியங்களை செய்ய ஒரு போதும் பயப் படாதீர்கள். தாமதமின்றி உடனே நல்ல காரியங் களை செய்யுங்கள். -நெப்போலியன் ஹில்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மண்டைதீவில் நடக்கும் நிலக் கபளீகரம் தடுக்காவிடில் ஆபத்து அதிகம்

யாழ்ப்பாணத்திற்கு மிக அண்மித்திருக்கின்ற மண்டைதீவின் நிலைமை மிகவும் கவலைக் குரியது. அதுபற்றி இவ்விடத்தில் பல தடவை கள் பிரஸ்தாபித்திருந்தும் பலன் ஏதும் இல்லை.

மண்டைதீவுக்குள் கடல் நீர் வருவதை தடுக் கும் மிக நீண்ட அணைக்கட்டு உடைந்து போன தால் கடல்நீர் உள்நுழைய மண்டைதீவின் பயிர் செய்நிலங்களும் கிணற்று நீரும் உவராகுவது பற்றி இவ்விடத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

அணைக்கட்டை புனரமைப்பது தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை ஆகவில்லை.

என்னசெய்வது, மேடையில்ஏறிஒலிவாங்கிக்கு முன்னால் எங்கள் அரசியல்வாதிகளும் அதிகாரி களும் ஆற்றும் உரையைக் கேட்டால் ஆகா! இவர் கள் அல்லவோ பசுமைப் புரட்சியின் பிதாமகர் கள் என்று நினைக்கும் அளவுக்கு அவர்களின் பேச்சின் சுவை இருக்கும்.

ஆனால் செயல் எதுவுமே கிடையாது. பல வருடங்களாக மண்டைதீவு அணைக்கட்டுப் பற்றி இவ்விடத்தில் குறிப்பிட்டு களைத்து விட்ட நிலையில் மீண்டும் ஒரு தலையிடி ஆரம்பித்து விட்டது.

ஆம், மண்டைதீவின் கிழக்குப் பகுதியிலுள்ள குடியிருப்புக் காணிகளும் பயிர்செய் நிலங் களும் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டு அங்கு கடற்படைக்கான கட்டுமானப்பணிகள் நடந்து முடிகின்றன.

மண்டைதீவு உயர் பாதுகாப்பு வலயமாக பிர கடனப்படுத்தப்பட்டிருந்த காலத்தில், அதன் ஒரு பகுதிக்குச் செல்வதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படாத நிலையில், மேற்படி நிலங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த கடற்படையினர் இப்போது அதனைக் கபளீகரம் செய்துள்ளனர்.

அழகிய-சிறிய இக்கிராமத்தில் இருக்கக் கூடிய பயிர்செய் நிலங்களையும் குடியிருப்பு நிலங்களையும் கடற்படையினர் தமதாக்கிக் கொள்ளும்போது மக்களின் பயன்பாட்டிற்கான நிலத்தின் அளவு குறைவடைந்து விடுகின்றது.

இதற்கு மேலாக, மண்டைதீவில் கடற்படை யினர் நிரந்தர முகாமை அமைத்து அங்கு தங்கு வதும் உறுதியாகியிருப்பதனால் மண்டைதீவு மக்களின் வாழ்வியல் அச்சம் நிறைந்ததாக இருப்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

இத்தகைய அச்ச நிலைமைக்கான கள நிலைமை நீடிக்குமாயின்-அங்கிருந்து மக்கள் வெளியேறும் பெருந்துயர் எதிர்காலத்தில் நடை பெறக் கூடிய சாத்தியம் உண்டு. எனவே இது விடயத்தில் காலம் கடத்தாத அதிரடி நடவடிக்கை அவசியம். நடக்குமா?

# பல்கலை.மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து நாட்டை இராணுவ மயப்படுத்த முயற்சி

## சஜித் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை இராணுவ மயப்படுத்தும் முயற்சிகளின் ஓர் கட்டமாக பல்கலைக் கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் நடவடிக்கை கருதப் படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதித் தலைவர் சஜித் பிரேம தாச தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சி அளிக் கும் நடவடிக்கை ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாக நோக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இளைஞர், யுவதிகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள பல்வேறு நிறுவனங்கள் நாட்டில் காணப்படு வதாக அவர் தெரிவித்துள்ளார். எனி னும் அரசாங்கம் பாதுகாப்பு அமைச் சின் ஊடாக மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்குவதாக அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

இதன்மூலம் அரசாங்கம் எவ்வாறு பொது விடயங்களை இராணுவ மயப் படுத்தி வருகின்றதென்பது புலனாவ தாக அவர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கட்டமைப்பானது அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை நிறைவேற்றும் கட்ட மைப்பு அல்ல என அவர் குறிப்பிட்டுள் ளார்.

பல்கலைக்கழகங்களின் அறிவுசார் உரிமைகளை பாதுகாப்பதற்கு அனை வரும் அணிதிரளவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அன்னதானமடம் இன்மையால் வீதியிலிருந்து உண்ணும் நிலை

கொடிகாமம்,வரணி, சுட்டிபுரம் அம் மன் கோவிலில் அன்னதான மடம் இன் மையால் மக்கள் திருவிழாக் காலங் களில் வீதியிலிருந்து உணவு உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தில் தற்போது திரு விழா நடை பெற்று வருவதனால் நாள் தோறும் அன்னதானம் வழங்கப்படு கின்றது.

இந்த ஆலயத்திற்கு கடந்த ஞாயிற் றுக்கிழமை விஜயம் செய்த ஐ.தே.க. வின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் இவ்விடயம் குறித்து ஆலய நிர்வாகத்தி னருடன் கலந்துரையாடியுள்ளார்.

ஆலயத்துக்கு அன்னதான மடத் தினை அமைத்து தருவதற்கு நடவடிக் கை எடுக்க வேண்டுமென்று ஆலய நிரு வாகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினி டம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

# அரசின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணவே தனியார் ஓய்வூதியத்திட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் தனக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாகவே தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதாக இலங்கை ஆசி ரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப் பட்ட தனியார்துறை ஊழியர்களுக் கான புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டு தொழிற் சங்க முன்னணி கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட் மொன்றை நடத்தியது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில்,

அரசாங்கம் தனது பொருளாதாரப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு தனியார்துறை ஊழியர்களினுடைய ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் பணிக் கொடை ஆகியவற்றின் நிதியை அபக ரிக்கும் ஒரு வேலைத்திட்டமாகவே இந்த ஓய்வூதியத் திட்டத்தை நாம் காண்கி றோம்.

இந்த புதிய ஓய்வூதியத் திட்டத்தை முன்வைத்து தனியார்துறை ஊழியர்க ளின் பணத்தை எடுக்கவே அரசாங்கம் முயற்சி செய்கிறது. இதற்கெதிராக தனி யார்துறை ஊழியர்களும் அரசாங்க ஊழியர்களும் ஒன்றாகச் சேர்ந்து போராடு வோம். அரசாங்கத்தின் இந்தச் செயல் நிறுத்தப்படும் வரை இந்தப் போராட்டம் தொடரும் என்றார்.

ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், தேசிய தொழிலாளர் காங்கிரஸ், சுதந்திர வர்த்தக நிலையங்களின் பொதுச் சேவை கள் தொழிற்சங்கம், கூட்டுறவு தொழிற் சங்க முன்னணி உள்ளிட்ட 26 தொழிற் சங்கங்கள் இந்த புதிய ஓய்வூதியத் திட்டத் திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

## யாழ். நகரப்பகுதியிலுள்ள 20 வர்த்தக நிலையங்களுக்கு 32, 500 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் கொழும்புத் தலை மைக் காரியாலயத்திலிருந்து வருகை தந்த குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையைய டுத்து யாழ்.நகரப் பகுதியிலுள்ள 20 வர்த்தக நிலையங்களுக்கெதிராக வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்த இந்தக்குழுவினருடன் யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைஅதிகாரிகள்இணைந்துமேற்கொண்ட சோதனை நடவடிக்கை மூலமே இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள னர்.

குறித்த வர்த்தக நிலையங்களுக் கெதிராக யாழ்.நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு நேற்று விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா 20 வர்த்தக நிலை யங்களுக்கும் மொத்தமாக 32 ஆயிர த்து 500 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப் பளித்தார்.

இதில் புடவைகளில் விலைச்சிட்டை ஒட்டப்படாத 8 புடவைக் கடைகளுக்கு தலா ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 12 ஆயிரம் ரூபாயும் காலாவதியான அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்த நிலையங்கள், குளிர்பானத் தைப் பொறிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக விற்பனை செய்த வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்கு அபரா தம் விதிக்கப்பட்டது.

இவ்வாறு 20 வர்த்தக நிலையங்க ளுக்கு மொத்தமாக 32 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள் ளது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



**ஆன்மீக எழுச்சி ஏற்படட்டும்**

அன்பு, இரக்கம் இவற்றை செயற்படுத்த வாய்ப்பு அளித்த இறைவனை துதிப்பது டன், உதவி செய்தவர்களை இறைவனாக எண்ண வேண்டும்.

இரக்கமுள்ள இதயம், சிந்தனை ஆற் றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகியவை நமக்குத் தேவை.

மனிதப்பிறவி ஞானமும் பக்தியும் அடை வதற்காக உருவாக்கப்பட்டுள்ளதால், ஆன்மீக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப்போகிறது. உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகாமல், தைரியத்துடன் வீரனாகத் திகழ வேண்டும். இந்தியாவில் முன் னேற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலில் ஆன்மீக எழுச்சி உண்டாக வேண்டும். அரசியல் கருத்துக்களை பரப்புவதற்கு முன்னால் நாட்டை ஆன்மீக வெள்ளத்தில் மூழ்கடிக்க வேண்டும்.

தன்னலம் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உல கத்திற்குத் தேவைப்படுகிறார்கள்.

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் அவை வட்டியும், முத லுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வரும்.

# தனியார் துறையினருக்கான ஓய்வூதிய திட்டத்திற்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தனியார் துறையினருக்கான ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

ஒருங்கிணைந்த தொழிற்சங்க ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் செயற்படும் தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டதுடன் தனியார் துறையினருக்கான ஓய்வூதியத்திற்கு எதிரான தங்களது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தினர்.

நேற்று நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அரசாங்கத்தையே திருப்திபடுத்தும் வகையில் ஓய்வூதியம் அமைந்துள்ளதாகவும் எனவே உழைக்கும் வர்க்கத்தினருக்கு தேவையான ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என கோஷங்கள் எழுப்பப்பட்டன.

எனவே அரசாங்கத்தின் இந்த கொள்ளை முயற்சிக்கு மக்கள் இடம்கொடுக்க கூடாது எனவும் இதனால் கட்சி பேதம் மறந்து நாட்டு மக்கள் அனைவரும் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிராக அணிதிரள வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஸ்ரீ-2)

# ஆலயத் திருவிழாவின் போது இரு குழுக்களிடையே மோதல்

(மிருசுவில்)

மிருசுவில் மன்னங் குறிச்சிப் பகுதியில் இரு குழுக்களிடையே அண்மையில் மோதல் ஏற்பட்டிருந்தது.

அப்பகுதியிலுள்ள முருகன் ஆலயத்தின் உற்சவ கால நிகழ்வுகளில் கலந்து கொண்ட குழுக்களே மேற்படி மோதலில் ஈடுபட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக ஆலயத்தின் நிர்வாகத்தினரால் அப்பகுதியில் கடமையிலிருந்த இராணுவத்தினரிடமும் கொடிகாமம் பொலிஸாரிடமும் தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த அவர்கள் மோதலில் . ஈடுபட்டவர்களை அப்பகுதியிலிருந்து அழைத்துச் சென்றனர்.

ஆலய திருவிழாக்களில் இவ்வாறான மோதல்கள் இடம்பெறுவது மனவருத்தத்தை தருவதாக அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

இச்சம்வத்தையடுத்து திருவிழாவும் இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மோதலில் 150 பேருக்கு மேல் ஈடுபட்டமையால் பொலிஸாரால் எவரையும் கைது செய்ய முடியவில்லை. இருப்பினும் மறுநாள் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி இரு குழுக்களை சார்ந்தவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-6-85)

# பழவகை,காய்கறிகளை கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் பெட்டிகளை பயன்படுத்துதல் கட்டாயம்

## அடுத்த மாதம் முதல் நடைமுறை

பிளாஸ்டிக் பெட்டிகளைப் பயன்படுத்தி பழவகை மற்றும் காய்கறி வகைகளைக் கொண்டு செல்லும் நடைமுறையை அரசாங்கம் அடுத்த மாதம் முதல் கட்டாயமாக்கியுள்ளது.

நுவரெலியா மாவட்ட விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பொருளாதார நிலையங்களுக்கும் 4 இலட்சம் பிளாஸ்டிக் பெட்டிகள் உள்ளிட்ட பொதிகளைப் பெற்றுக்கொடுத்து இன்று முதல் இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்தது.

அதன் பிரகாரம் நுகர்வோர் அதிகார சபையினால் விதிக்கப்பட்டுள்ள காய்கறி மற்றும் பழவகை கொண்டு செல்லும் போது பிளாஸ்டிக் பெட்டிகள் உள்ளிட்ட பொதிகளைக் கட்டாயம் பயன்படுத்துதல் வேண்டுமென்ற வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் ஜூன் மாதத்தில் வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# அரியாலை நாகபடுவான் கி.சே.பிரிவில் இருநூறு நிரந்தர வீடுகள் நிர்மாணம்


(பூநகரி)

பூநகரி அரியாலை நாகபடுவான் கிராம சேவகர் பிரிவில் போர்க்கால நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியுள்ள வீடுகளை இழந்த மக்களுக்காக நிரந்தர 200 வீடுகளை அமைக்கும் பணி சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபன நிதியுதவியுடன் ஆரம்பித்து நடைபெறுவதாக பூநகரி பிரதேச வட்டார செயலகங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு வீடும் 500 சதுர அடி நிலப் பரப்பைக் கொண்டதாக அமைக்கப்பட்டு இப்பிரதேச மக்களுக்கு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-84)

# லசந்த படுகொலைச் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் அவசியம்

## சஜித் பிரேமதாச எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டில் சிவில்,மனித மற்றும் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தவேண்டும் என தாம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

லசந்த படுகொலைச் சம்பவத்தை சட்டத்திற்குப் புறம்பான வகையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய படுகொலைச் சம்பவமாக தாம் கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். லசந்த படுகொலைச் சம்பவத்துடன் சரத் பொன்சேகாவிற்கு தொடர்பு இருப்பதாக தாம் ஒருபோதும் குறிப்பிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும் லசந்தவின் படுகொலையாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் இது பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தலைமைத்துவ பயிற்சிக்கு எதிராக 5 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ள தலைமைத்துவப் பயிற்சிக்கு எதிராக நேற்று முன்தினம் ஐந்து அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

உச்ச நீதிமன்றில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இலங்கை ஆசிரியர் ஒன்றியமும் நான்கு மாணவர்களும் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.


2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்த ஆர்.எம்.சுபாஷினி பாபசலா ரட்நாயக்க, ஜித் பிரியதர்சன, ருத்அக்ரம் மற்றும் ரேணுகா ரான்கலா ஆகிய மாணவ, மாணவியர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அதன் தலைவர், உயர்கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இராணுவ முகாம்களில் தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களின் மத, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)







தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மறவன்புலோ கிராமத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தையல் தொழிற்பயிற்சி நிலையத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் மறவன்புலோ ஜே/ 298 கிராமசேவையாளர் ஆ. நடராஜா மங்கல விளக்கேற்றுவதையும் தேசிய இளைஞர் சேவை மன்ற வட மாகாணக் கணக்காளர் எஸ். இரட்ணகுமார் உரையாற்றுவதையும் தேசிய இளைஞர் சேவை மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி. சி. விமலேஸ்வரி தொழிற்பயிற்சியினை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- தனங்கிளப்பு செய்தியாளர்)*

# ரெய்னா சரவெடியில் நடப்பு சம்பியன் சென்னை

# இறுதிப் போட்டிக்குள் நுழைவு

(மும்பை)

சுரேஷ் ரெய்னாவின் அதிரடியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

தோல்வியைத் தழுவிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் காத்திருக்கிறது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் நான்காவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் லீக் சுற்று முடிபடைந்த நிலையில் பிளே ஒப் சுற்றின் முதலாவது தெரிவுப் போட்டி நேற்று மும்பையில் நடைபெற்றது.

இதில் லீக் சுற்றில் முதல் இரு இடங்களைப் பெற்ற தோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 175 ஓட்டங்களை எடுத்தது.

இதில் விராட் ஹோலி ஆட்டமிழக்காமல் 44 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 70 ஓட்டங்களையும் அகர்வால் 33 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 34 ஓட்டங்களையும் போ.மேர்ஸ்பாட்ஜ் 18 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 29 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் 11, ஹயில் 08 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பொல்லிங்கர், அஸ்வின் பிரவோ, ஜகதி தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.



பதிலுக்கு 20 ஓவர்களில் 176 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஆரம்பத்தில் 1.3 ஓவர்களில் 7 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் ரெய்னாவின் அதிரடியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 19.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 177 ஓட்டங்களை குவித்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் நடப்புச் சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

துடுப்பாட்டத்தில் சுரேஸ்ரெய்னா ஆட்டமிழக்காமல் 50 பந்துகளில் (4 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 73 ஓட்டங்களையும் பத்திரிநாத் 32 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 34 ஓட்டங்களையும் அணித்தலைவர் தோனி 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 29 ஓட்டங்களையும் அல்பி மோர்கல் 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸ்சர் உட்பட) 28 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும் அரவிந், மிதுன் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்புமுனை அமைத்த சுரேஸ்ரெய்னா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இப் போட்டியில் தோல்வியடைந்த பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி இன்று நடைபெறும் இரண்டாவது தெரிவுப் போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் நாளை மோதுகின்றது. இதில் வெற்றிபெறும் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.

## இன்றைய ஆட்டம்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

எதிர்

மும்பை இந்தியன்ஸ்

நேரம் :- இரவு 8.00 மணி

மைதானம் :- மும்பை

# இரண்டாவது டெஸ்டில் பாகிஸ்தான் அணி வெற்றி



## தொடர் சமனிலையானது

(சென்.கிற்ஸ்)

இரண்டாவது டெஸ்டில் மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்திய பாகிஸ்தான் அணி 1:1 என சமனிலையாக்கியது.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்ற நிலையில் இரண்டாவதும் இறுதியுமான போட்டி கடந்த 20ஆம் திகதி சென்.கிற்ஸில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 272 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அசார் அலி 67, உமர் அக்மல் 56 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ராம்போல், பிஸ்சோ தலா 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் சமி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 223 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சாமுவேல்ஸ் 57, ராம்போல் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் சயிட் அஜ்மல், மொகமட் ஹபிஸ் தலா 3 விக்கெட்டுக்களையும் அப்துர் ரீமன் 2 விக்கெட்டுக்களையும் அகமெட், வாகாப் றியாஸ் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற பாகிஸ்தான் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 377 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதன் மூலம் மேற் கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றியிலக்காக 427 ஓட்டங்களை பாகிஸ்தான் அணி நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில் தௌபிக் உமர் 135 ஓட்டங்களையும் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் அசார் அலி 53 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிஸ்சோ 2 விக்கெட்டுக்களையும் ரோச், ராம்போல், சமி தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 427 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்ட மதியபோசன இடைவேளைக்கு முன் 230 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் அணி 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை 1:1 என்ற கணக்கில் சமனிலையாக்கியது.

துடுப்பாட்டத்தில் டரன் பிரவோ 50 ஓட்டங்களையும் அணித்தலைவர் சமி 41 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அப்துர் ரீமன் 4 விக்கெட்டுக்களையும் சயிட் அஜ்மல் 3 விக்கெட்டுக்களையும் அகமெட், றியாஸ் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு வழிசமைத்த தௌபிக் உமர் ஆட்டநாயகனாக தெரிவாகியதுடன் தொடர் நாயகன் விருதை சயிட் அஜ்மல் பெற்றார்.

## கிரிக்கெட் விளையாட வருமாறு

# பாக்.அழைப்பு இலங்கை நிராகரிப்பு

(கொழும்பு)

கிரிக்கெட் போட்டிகள் விளையாட வரும்படி இலங்கைக்கு பாகிஸ்தான் விடுத்த அழைப்பை பாதுகாப்புக் காரணங்களை மேற்கோள்காட்டி இலங்கை நிராகரித்துள்ளது.

லாகூர் நகரில் 2009ஆம் ஆண்டு அங்கு சென்றிருந்த இலங்கை அணியினர் பயணித்த பேருந்து மீது துப்பாக்கித்தாரிகள் தாக்குதல் நடத்தியபின் பாகிஸ்தானில் எந்த கிரிக்கெட் போட்டியும் இடம்பெறவில்லை.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் தமது நாட்டுக்கு கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வருமாறு இலங்கைக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்தது.

ஆனால் தமது அணியினரின் பாதுகாப்பு குறித்த கவலைகள் இருப்பதால், அங்கு பயணம் செய்ய முடியாத நிலை உள்ளது என்று இலங்கை கிரிக்கெட் சபையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியை பாகிஸ்தானுக்கு அனுப்பப் போவதில்லை என்று இலங்கை கிரிக் கெட் சபையின் தலைவர் டி.எஸ்.டி சில்வா உறுதியாக கூறிவிட்டார்.

எனினும் இரு நாடுகளுக்குமிடையேயான போட்டிகளை கொழும்பிலோ அல்லது டுபாய் அல்லது அபுதாபி போன்ற மூன்றாவது இடத்திலோ நடத்துமாறு தாங்கள் பாகிஸ்தானிடம் கோரியுள்ளதாகவும் டி சில்வா கூறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கூட பாகிஸ்தானுக்கு விளையாடச் செல்வது குறித்த அனுமதியை இதுவரை வழங்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 20 ஓவர்களைக் கொண்ட ஒரு போட்டியிலும் விளையாட தமது நாட்டுக்குவருமாறு இலங்கைக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கராச்சியில் உள்ள தேசிய விளையாட்டு அரங்கத்துக்கு அருகில் உள்ள கடற்படை விமானத்தளத்தின் மீது தலிபான்கள் நடத்திய தாக்குதல், இலங்கை அணியின் பாகிஸ்தான் விஜயத்திற்கு ஒரு பேரடியாக அமைந்தது.

# தந்திரமாக நகையைப் பெற்று தலைமறைவான பெண் கைது

(மிருசுவில்)

கொடிகாமம் பகுதியில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை அபகரித்த பெண் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணையில் தெரியவந்ததாவது,

பிரஸ்தாபப் பெண் தனது கணவர் வெளிநாட்டில் வேலை செய்வதாகவும் தற்காலிகமாக வசிப்பதற்கு காணி ஒன்று தருமாறும் அப்பகுதியிலுள்ள ஒருவரிடம் கேட்டுள்ளார்.

இதனையடுத்து அவரால் வழங்கப்பட்ட காணியில் அவரது அனுமதியின் பேரில் வீடு ஒன்றை அமைத்து வாழ்ந்து வந்துள்ளார்.

இந் நிலையில் சில தினங்களுக்கு முன்பு திருமண வீட்டிற்குச் செல்லவேண்டும் எனத் தெரிவித்து அயலிலுள்ளவர்களின் தங்க நகைகளை கேட்டுள்ளார்.

அயல் வீட்டுக்காரர்கள் இவரை நம்பி பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளையும், ஒன்றரை இலட்சம் ரூபாய் பணத்தையும் கொடுத்துள்ளனர்.

அத்துடன் நின்றுவிடாமல் காணி வழங்கியவரது மனைவியிடமும் சென்று நகைகளை வேண்டியுள்ளார்.

இவ்வாறு அபகரித்த நகைகளுடனும் குறித்த பெண் தலைமறைவாகியுள்ளார்.

நகைகளைப் பறிகொடுத்தவர்கள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸாரால் குறித்த பெண்ணை உரும்பிராய் பிரதேசத்தில் வைத்து கைது செய்தனர். விசாரணையின்போது இவர் அரியாலையைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் பல திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என விசாரணைகளின் மூலம் தெரியவருகிறது.

இதேவேளை தங்குவதற்கு இடம்கொடுத்த நபரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6, 85)

# மாவை எம்.பி....

மூலத்தை விசாரணை செய்ய மேல் நீதிமன்றம் தகுந்த ஆதாரங்கள் இல்லை என இவர்கள் மீதான வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

ஆனால் வழக்கு முடிபுற்று 08 மாதங்கள் கடந்தும் சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து கைதிகளின் விடுதலை தொடர்பான தேவையான ஆவணம் வராததால் தொடர்ந்தும் சிறையில் வாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தங்களை உடன் விடுவிக்குமாறு கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கைதிகளின் இத்தகைய கோரிக்கையை கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பாக அரசாங்கத்திடம் வலியுறுத்துவதாக தெரிவித்துள்ளார். (ச-6)

# தமிழ் மக்களின் நிலை...

ளவில் ஆயுத உதவிகளை வழங்கி ஆதரவு வழங்கியது.

யுத்தத்தின் பின்பும் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருக்கின்றது. இப்பொழுது மிகப் பாரியளவில் தமிழர் வாழும் பகுதிகளில் இராணுவ மயமாக்கல் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

நாடு முழுவதிலும் இராணுவ முகாம்களை மேலும் அதிகரிக்கப் போவதாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஆகவே இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் யுத்தத்தின் பின்பு அனுபவிக்கின்ற துன்பங்கள் தொடர்பாக சீனா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு உண்மை நிலைவரங்களை எடுத்துக் கூறவேண்டிய தேவை இருக்கின்றது என நாங்கள் கருதுகின்றோம்.

ஆகவே இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக அவர்களுக்கு விளக்கவேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோள்.

இலங்கை அரசாங்கத்திற்கு மிக நெருக்கமாகச் செயற்பட்டு வந்தார்கள் என்ற ரீதியிலும் யுத்தத்தின் பின்பு தமிழ் மக்களின் உண்மை நிலையை புரியவைக்கவேண்டும் என்ற தேவையிலுமே நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளோம். எமது தேவைகளை அவர்கள் புரிந்துகொள்வார்களோ? இல்லையோ? என்பது இரண்டாம் கட்டம். இருப்பினும் அவர்களைச் சந்தித்து எமது மக்களின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறவேண்டிய கடமைப்பாடு எமக்கு உள்ளது.

இவ்வாறு நாம் செய்வதன் ஊடாக இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அவர்களுக்கு விளங்க வைப்பதே எமது நோக்கம். சீனா, ரஷ்யாவுடன் பேசுவதால் இந்தியாவுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ள உறவில் மாற்றம் ஏற்படாது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்தியா பாரிய பங்காற்றியுள்ளது. அது மட்டுமன்றி இந்தியா எமது ஆத்மார்த்தமான நண்பரும் கூட என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்துகொள்ளவேண்டும் என்றால் அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடன் பேசலாம். இப் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பாக பங்குபற்றாமல், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை ஆளும் தரப்பிலுள்ள கட்சி என்ற வகையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திடம் வலியுறுத்தமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-5,6)

# கருணாநிதியும் ஸ்ரா...

அவரது தந்தையும் திமுக தலைவருமான கருணாநிதி நேற்று முன்தினம் திகார் சிறையில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அத்துடன் கனிமொழியின் தாயார் ராசாத்தி அம்மாள், மத்திய அமைச்சர் மு.க.அழகிரி மற்றும் திமுக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் கருணாநிதியுடன் புது டில்லியில் தங்கியுள்ளனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் இரவு புதுடில்லிக்குச் சென்ற ஸ்ராலின், மத்திய புலனாய்வுக் கழக நீதி மன்றத்தில் நேற்று முன்னிறுத்தப்பட்ட கனிமொழியைச் சந்தித்து சுமார் 40 நிமிடங்கள் கலந்துரையாடினார்.

ஸ்ராலினுடன் திமுகவின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் அக் கட்சியின் மூத்த தலைவர்களும் நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தனர்.

அதேபோன்று இதே வழக்குக்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் மத்திய தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ராசாவையும் ஸ்ராலின் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மத்திய புலனாய்வுக் கழக நீதிமன்றத்தில் ராசாவுக்கும், கனிமொழிக்கும் நடுவில் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த ஸ்ராலின் இவ்விருவரிடமும் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கனிமொழி தனக்கு பிணை வழங்கும்படி நேற்று முன்தினம் தாக்கல்செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ராஜீவ்காந்தி கொலைப் பின்னணியில் மறைமுகமாக திமுக செயற்பட்டது

## மௌனம் கலைத்தார் தமிழக முதல்வர்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையின் பின்னணியில் திமுக மறைமுகமாக இருந்தது என்பது தங்கள் குற்றச்சாட்டு என ஜெயலலிதா கூறியுள்ளார்.

சி.என்.என். ஐ.பி.என். தொலைக்காட்சி சேவைக்கு கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் அளித்த பேட்டியில், ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் அதன் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானும்தான் திட்டமிட்டு கொன்றதாக ஒப்புக்கொண்டார்.

அத்துடன் ராஜீவ் காந்தியை படுகொலை செய்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் கூறியிருந்தார்.

மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் கொலை செய்ய விடுதலைப்புலிகள் முயன்றதாக அந்தப் பேட்டியில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர் ஜெயலலிதாவிடம் கே.பி.யின் பேட்டி குறித்து கருத்து கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர் கடந்த 1991ல் இருந்தே எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தது. அதில் புதிய விஷயம் எதுவுமில்லை. ராஜீவ் காந்தி படுகொலையின் பின்னணியில் திமுகவுக்கு மறைமுகமாக தொடர்பு இருக்கிறது என்றே நாங்கள் சொல்லி வந்துள்ளோம் என்றார் முதல்வர். (ச-6)

# கிழக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வு பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என்று அழைக்கப்படும் எட்வின் கிருஷ்ணானந்தராஜா கைதுசெய்யப்பட்டமையையும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டதையும் கண்டித்து கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நேற்றைய சபைக் கூட்டத்தை பகிஷ்கரித்தனர்.

அத்துடன் கைதுசெய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எட்வின் கிருஷ்ணானந்தராஜாவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பவும் அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர். மாகாணசபை உறுப்பினர்களின் பகிஷ்கரிப்புக் காரணமாக சபை அமர்வு அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்றைய அமர்வில் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொள்ளவில்லை.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எட்வின் கிருஷ்ணானந்தராஜா கடந்த திங்கட்கிழமை கொழும்பிலிருந்து சென்ற இரகசிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஜனநாயகத்தை நிலை...

என்று மக்கள் விடுதலை முன்னணி கோரியுள்ளது. இந் நிலையில் அவசரகாலச் சட்டம் விரைவில் படிப்படியாக அகற்றப்படவேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும்.

நாட்டில் அவசரகாலச் சட்டத்தை நீக்கி ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இது தொடர்பில் ஆராயப்படுவது அவசியமாகும்.

இதேவேளை நோர்வே அரசாங்கம் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர் நெடியவனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளமை சிறந்த விடயமாகும்.

சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் முடக்கப்படவேண்டும் என்பதில் இரண்டு கருத்திற்கு இடமில்லை.

அதேபோன்று வடக்கு மக்கள் விடயத்தில் அரசாங்கம் அரசியற் தீர்வை முன்வைக்கவேண்டியது விரைவான தேவையாகவுள்ளது. சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றுக்கு அரசாங்கம் செல்லவேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக சர்வதேச மட்டத்திலான அழுத்தங்களைத் தவிர்க்க முடியும் என அவர் கூறியுள்ளார். (ச-5)

# போர்க் குற்றங்களை மறை...

சுமத்தியுள்ளது.

வன்னிப்போரின்போது படைத்தரப்பால் பொதுமக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள், மருத்துவமனைகளை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்த உண்மைகள் வெளியேவருவதைத் தடுக்கும் வகையில் பயங்கரவாதத்தை தோற்கடித்தவர்களில் முன்மாதிரியானவர்கள் என அரசாங்கம் வெளிக்காட்டிக்கொள்ளவே இக் கருத்தரங்கை நடத்துவதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 31ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 02 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கிற்கு 54 நாடுகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இக் கருத்தரங்கில் 42 நாடுகளிலிருந்து 300 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளதாக இலங்கைப் படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூர்ய தெரிவித்திருந்தார். இக் கருத்தரங்கில் கலந்துகொள்ள 25 சர்வதேச ஊடக நிறுவனங்களும் அனுமதி கோரியுள்ளன.

இக் கருத்தரங்கில் இலங்கைப் படைத்துறை அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ, கலாநிதி றொகான் குணரட்ண, அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலாளர் கொண்டலீசா ரைஸின் ஆலோசகர் கலாநிதி டேவிட் கில்குலென் மற்றும் கலாநிதி அகமெட் காசிம் ஆகியோர் முக்கிய உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-5)

இறைச்சிக் கோழி விற்பனை
சுத்தம் செய்த நிறை Kg - 420/=
CSI
முழுநிறை Kg - 270 /=
வரணி மிஷன் பாம், வரணி
தொடர்புகளுக்கு: 0777715367
(4895)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.